ஆசிரியைகள் தூய வெண்ணிற உடையணிந்து புனிதமாக வரும் காட்சியே ஒரு தனி அழகுதான், எனக்குப் பாலர் வகுப்பில் ஆசிரியையாக இருந்தவர் திருமதி. நேசமணி அவர்கள். அவர்களது உருவமும், கனிவும், படிப்பிக்கும் திறமையும் இன்றும் என்னால் மறக்கமுடியவில்லை. அவர் தொடக்கி வைத்த ''அ'' என்ற அட்சரமே இன்று நான் ஒரு ஆசிரியையாக விளங்க வழிசெய்தது. என்பது என் நம்பிக்கை. திரு. சோ. இராமசாமி சர்மா என்ற ஆசிரியர் வித்தியாலயத்தினதும், சபையினதும் சமய நிகழ்ச்சிகளில் பங்கேற்று பூசைகளை நிகழ்த்தி வைப்பார். அவர் தொடர்ந்து எமது வித்தியாலயத்திலேயே சேவையாற்றி ஓய்வு பெற்றார்.

எமது தலைமையாசிரியரே எமக்கு ஆங்கிலம் கற்பித்து வந்தார். 1944ம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சைக்கு எம்மை தோற்றச் செய்து, சிறந்த பெறுபேறுகளையும் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தினார். எமக்கு பல வழிகளிலும் ஊக்கமளித்ததுடன், வானொலி நிகழ்ச்சிகள், பொது அறிவுப் போட்டிகளிலும் பங்குபற்ற வழி செய்தார்.

1946ம் ஆண்டு நான் ஏழாம் வகுப்பில் கற்றுக்கொண்டிருக்கும் பொழுது கடுமையான சுகயீனத்தால் பாதிக்கபட்டதால் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் என் கல்வி தடைப்பட்டது. சிகிக்சை பெற்று உடல் நலம் ஏற்பட்டதும், மீண்டும் கல்வியைத் தொடரவேண்டும் என்ற ஆர்வத்தால் 1950ஆம் ஆண்டு பாடசாலையில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தேன். நான் மீண்டும் பாடசாலையில் சேர்ந்த அந்த வேளையில் வெறுமனே இருந்த வெற்றுநிலத்தில் நான்கு அறைகள் இருப்பதைக் கண்டேன். இவ்வறைகளில் இரண்டில் புதுச்செட்டித்தெருவில் பிரபல நகை வர்த்தகராய் இருந்த பட்டக்கண் ஆச்சாரி அவர்களின் புதல்வர்களான ப. குமாரசாமி ஆச்சாரி, ப. சுப்பையா ஆச்சாரி அவர்களின் பெயர்கள் அறைகளின் முன் பதிக்கப் பெற்றிருந்தன. ஆகவே, அவை அவர்களின் நன்கொடை என்பது தெளிவு.

1951ம் ஆண்டு ஆரம்பத்தில் திரு.கு.வி. செல்வத்துரை அவர்கள் நிரந்தர தலைமையாசிரியராக எமது வித்தியாலயப் பணியை மேற்கொண்டார். அவரது பாரியாரும் இங்கு கடமை ஏற்றார். இவர் தமது சேவைக் காலத்தில் சபையாருடனும், ஆசிரியர்களுடனும் பெற்றோர்களுடன் ஒத்துழைத்து, எமது வித்தியாலயத்தை உயர்வடையச் செய்ததால் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றார்.

சபையினரின் ஏற்பாட்டில் பலமுறை சரித்திர சம்பந்தமான சுற்றுலாக்கள் இடம் பெற்றன. ஆண்டுதோறும் திருக்கேதீச்சரத்தில் நடைபெறும் சிவராத்திரி விழாவிலும், கார்த்திகைத் திங்கள் பூசையிலும் சபையினரும், வித்தியாலய ஆசிரியர்களும், மாணவர்களும் பங்குபற்றி வந்தோம். இவர் காலத்தில் கலைநிகழ்ச்சிகள், சமய விழாக்கள், பொருட்காட்சிகள் என்பனவும் பலமுறை இடம்பெற்றன. இவரது நிர்வாகத்திலேயே முதன்முதல் பொதுக் கல்வித் தராதரப் பத்திர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சிறிய கட்டிடத் திறப்புவிழாவும், விவேகானந்தாவின் வெள்ளிவிழா வைபவமும் 1951ம் ஆண்டு தவத்திரு ''குன்றக்குடி அடிகளார்'' அவர்களின் ஆசியுடன் இனிது நிறைவெய்தியது. அவ்வைபவத்தில் பாரதப் பிரதமர் அமரர் நேரு அவர்களின் சகோதரி திருமதி. டண்டிட் விஜயலட்சுமி அம்மையாரின் சொற்பொழிவும், திருமதி எம். எல். வசந்தகுமாரியின் இன்னிசைக் கச்சேரியும் சிறப்பு நிகழ்ச்களாக இடம்பெற்றன.

ஞாயிறு தோறும் சைவசமயபாட வகுப்புகள் நடைபெற்றன. சபையினரால் நடாத்தப்பட்ட சைவசமயப் பாடப் பரீட்சையிலும், நாவலர் பேச்சுப்போட்டியிலும் எம்மை பங்குகொள்ளச் செய்து, ஊக்கமளித்து வந்ததால் நாம் சித்தி அடைந்ததுடன், பல பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்று எமது ஆசிரியர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுவந்தோம். சபையினரின் முயற்சியாலும், ஆசிரியர்களின் ஆர்வத்தாலும், காலந்தோறும் பல தமிழ் அறிஞர்களதும், சைவப் பெரியார்களதும் சொற்பொழிவுகளையும், அறிவுரைகளையும் செவிமடுக்கும் பேறு பெற்றிருந்தோம்.

1953ம் ஆண்டு முதன்முதலாக எமது வித்தியாலய மாணவர்களாகிய நாங்கள் ஐந்து பேர் க. பொ. த. பரீட்சைக்குத் தோற்றியதில் நான்குபேர் ஆங்கிலத்துடன் பூரண சித்தியடைந்தோம். ஒருவர் நூன சித்தி அடைந்தார். இவ்வெற்றிக்குக் காரணமாக இருந்தவர்கள் எம்மைக் கற்பித்த ஆசிரியர்களே. அவர்கள் மாணவர்களாகிய எம்மீது கொண்ட அக்கறையும், பொறுப்புணர்ச்சியும், எம்முடைய ஆர்வமும் தான் அவ்வெற்றியை ஈட்டித் தந்தது. தொடர்ந்துவந்த ஆண்டுகளிலும் க.பொ.த. பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று விவேகானந்தா முன்னணியில் திகழ்ந்ததோடு, ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகள் கிடைத்தன.

எமது வித்தியாலய ஆசிரியர்களின் விடாமுயற்சியாலும், ஆர்வத்தாலும் நான் ஆசிரியப் பயிற்சி கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டேன். கோப்பாய் அரசினர் மகளிர் கல்லூரியில் இருவருட காலப் பயிற்சியை முடித்த பின்னர் 1958 ஆம் ஆண்டு யூலை மாதம் 1ந் திகதி நான் விவேகானந்தாவின் ஆசிரியையாகப் பணியை ஏற்றேன்.

1953ம் ஆண்டு சபையினரால் வித்தியாலய நிதிக்காக வித்தியாலய மாணவர்களால் ஒரு கதம்ப நிகழ்ச்சி நடத்தப்பட்டு நிதி திரட்டப்பட்டது. அந்த நிதியைக் கொண்டே சென்ற ஆண்டு பாலர் வகுப்புகளுக்கென கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுள்ள, மூன்று மாடிக் கட்டிடம் இருக்கும் இடத்தில் இருந்த நான்கு அறைகளும் கட்டி எழுப்பப்பெற்றன.

1951ம் ஆண்டு முதல் தலைமையாசிரியராகப் பணியாற்றி பல அரிய சேவைகளைச் செய்து, எம்மையும் ஊக்குவித்த தலைமையாசிரியர் திரு. கு. வி. செல்வத்துரை அவர்கள் 1960ம் ஆண்டு தமது சொந்த ஊரான

புங்குடுதீவுக்கு மாற்றம் பெற்றுச் சென்ருர். அவரது பிரிவு எமது வித்தியாலயத்திற்கு ஓர் பேரிழப்பாகும். அவரது சேவைக்காலம் ஒரு பொன்னன காலமாகும்.

அதன்பின் திரு. வ. நடராசா அவர்கள் தலைமைப் பதவியைப் பெற்றுத் திறம்பட கடமை புரிந்து வந்தார். 1962ம் ஆண்டு எமது பாடசாலையும் அரசாங்க பாடசாலையானது. அதன் பின்னர் வித்தியாலயம் பல அதிபர்களையும் ஆசிரியர்களையும் காணும் பேறுபெற்றது. அவர்களுள் 1963ம் ஆண்டு கடமையேற்ற அதிபர் திரு. சோமசுந்தரம் அவர்களது நிருவாகமும் போற்றற்குரியது. அவர்களது காலத்திலேயே, அவரது பெரும் முயற்சியால் கலை, வர்த்தகப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டதுடன், க.பொ.த. உயர்தர வகுப்புகளும் ஆரம்பிக்கப் பட்டன. பல பட்டதாரி ஆசிரியர்களது வருகையும் அதிகரித்தது. அவருக்குப் பின்னர் பல அதிபர்களைக் கண்டதுடன், மீண்டும் வ. நடராசா அவர்கள் பதவி உயர்வு பெற்று விவேகானந்தாவின் அதிபராகக் கடமை ஏற்ருர். மகாவித்தியாலய அந்தஸ்தைப் பெற்றிருந்த எமது பாடசாலையின் தரத்தை மேலும் உயர்வடையச் செய்தார். அவர் ஆசிரியராக இருந்த காலம் தொடக்கம், அதிபராகப் பதவி உயர்வு பெற்ற பின்பும் தொடர்ந்து க.பொ.த. வகுப்பிற்கு சைவசமயம் கற்பித்து வந்தார். அவரிடமே நானும் சைவ சமயம் கற்றேன். அவரது காலத்தில் எந்த ஒரு மாணவரும் பரீட்சையில் தவறியதில்லை. நாங்கள் ஐந்துபேர் பரீட்சை எழுதியதில் இருவர் விசேட சித்தியும், மூவர் திறமைச் சித்தியும் பெற்றேரும். அம்மூவரில் இருவர் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த மாணவிகள் என்ருல் அவரது திறமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? சில ஆண்டுகளின் பின்னர் அவர் தம் திறமையால் வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று, சேவையாற்றி பின் இளைப்பாறினுர்.

பாடசாலை, சபையினரின் முகாமையின் கீழ் இருந்த பொழுது சபையினர் புதுச்செட்டித் தெரு காணியை விலைக்கு வாங்கி தமது சொத்தாக வைத்திருந்தனர். அதனை அரசாங்கம் 1968ம் ஆண்டு விலை கொடுத்து வாங்கி பாடசாலையுடன் இணைத்தது. இதனுல் எமது இட நெருக்கடி ஓரளவு தீர்க்கப்பட்டது.

1972ம் ஆண்டு திரு. சே. மகேசன் அவர்கள் எமது வித்தியாலய அதிபராகக் கடமையை ஏற்ருர். அவர் தமது சேவைக் காலத்தில் மாணவரது முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து அரும்பணி ஆற்றினுர். அவர் பதவி எற்ற சில மாதங்களுள், பெற்ருேரதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டது. தெருத் தெருவாக, வீடுவீடாகச் சென்று நிதி சேர்க்கும் பணியைத் தொடங்கினுர். சிறு துளி பெருவெள்ளம் போல் பெரும் நிதி திரட்டப்பட்டது. இரு வருடங்களுள் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டி முடித்து, திறப்பு விழாவும் செய்து சாதனையை நிலை நாட்டினுர். அடுத்து பல வசதிகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடத்தையும் கட்டி முடித்ததுடன், பல ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் காலன் அவரது உயிரைக் கவர்ந்து சென்றுவிட்டான். அவர் நினைவுகள் எமது நெஞ்சங்களை விட்டு என்றுமே அகலுகின்றதில்லை.

''உள்ளத்தால் பொய்யா தொழுகின்
உலகத்தார் உள்ளத்து எல்லாமுளன்''

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அவர் பூதவுடல் மறைந்தாலும், புகழுடம்பு அழியாது, எல்லோரது உள்ளத்துள்ளும் அணையா ஜோதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் பெருமையைப் பெற்றுவிட்டார். அன்னரது ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவோமாக.

அன்னரது வெற்றிடத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் எமது அதிபர் திரு. சு. மாணிக்கவாசகர் அவர்கள், அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்து, எமது வித்தியாலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்ருர். அவரது சேவைக் காலத்தில் இனும் பல அரிய பணிகளைச் செய்து எமது வருங்கால சந்ததியினரின் வாழ்வை உயர்வடையச் செய்வதற்கு இறைவன் அருள் புரிய வேண்டும் என்று பணிகின்றேன்.

# எண்பது ஆண்டுகளாகியும்

**கலாநிதி - வே - இராமகிருஷ்ணன்**
*பணிப்பாளர்*
*அகில உலக இந்து கேந்திர நிலையம்*
*இந்து கலாசார அமைச்சு*
*கொழும்பு.*

1902ம் ஆண்டு ஜுலை மாதம் நான்காம் திகதி. அது ஒரு வெள்ளிக்கிழமை. அன்று ஒரு பெரியார் பரகதி யடைந்தார். இது பாரத நாட்டின் வங்க தேசத்தின் தலைநகரான கல்கத்தாவில் நடந்த சம்பவம். எண்பது ஆண்டுகள் கழிந்த பின்பும் இலங்கையில் வாழும் நாம் நன்றி கலந்த பக்தியுணர்வோடு அன்னாருக்கு விழா எடுக்கின்றோம், அவர் கூறிய அரிய கருத்துக்களும் அவை எற்கத்தக்கவை என்பதை நிலைநாட்ட இலக்கணமாக வாழ்ந்து காட்டியதும், கருத்துக்களுக்கு ஏற்ப பணிகள் தொடரவேண்டும் என்பதற்காக மாபெரும் நிருவாக அமைப்பை உருவாக்கித் தந்ததுமே நன்றியுணர்விற்குக் காரணமாகின்றது.

அப்பெரியாருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நரேந்திரன். துறவு பூண்டதும் சுவாமி விவேகானந்தரென அழைக்கப்பட்டார். அத்துறவியின் பெயர் பாரத நாட்டில் மட்டுமல்ல -அமெரிக்காவின் மேற்கெல்லையில் உள்ள கலிபோர்னியா தொட்டு தென் கிழக்காசியாவிலுள்ள சிங்கப்பூர் வரை அறிஞர்கள் அபிமானத்தோடு அழைக்கும் பெயராகிவிட்டது. தோன்றிற் புகழுடன் தோன்றுக என வள்ளுவர் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தார். விவேகானந்தர் தேடிக் கொண்ட புகழ் சர்வதேச ரீதியானது. 'உடல் அழிந்தாலும் ஒருவரது நாமம் அழிவதில்லை' என்பது ஒரு ஜப்பானிய முதுமொழி. எண்பது ஆண்டுகள் கழிந்தும் எமது உள்ளத்தைக் கவர்ந்த நிலையிலேயே சுவாமி அவர்கள் இருக்கிறார்.

புகழைத் தேடிச் செல்பவன் புகழை அடைவதில்லை. மாறாக ''புகழ் விரும்பி'' யென வகைப்படுத்தி அவனைச் சமூகம் நையாண்டி செய்யும். பற்றற்ற மனப்பாங்குடன் ஆக்கப்பணி புரிபவர்களுக்கே புகழ் உரியது. செயலும் ஞானத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதுவே விரும்பத்தக்கதும் நிலையானதுமான தாக்கத்தை வரலாற்றில் ஏற்படுத்தும். தாம் வாழும் சூழலை நன்குணர்ந்து செய்யத்தக்கது இது வெனும் நியமங்களை அறிந்து இயங்குவதையே ஆக்கப் பணிகள் என்போம். இவற்றின் கூட்டுத் தொகையே வரலாற்றில் திருப்பு முனைகளை உருவாக்குகின்றன. பற்றற்றவர்களைத் துறவிகளென்போம். துறவு நிலையில் ஞானம் உருவாகும். அவ்வாறு செய்வன யாவும் தொண்டாகும், தொண்டு செய்வதற்கே நரேந்திரரும் துறவியானார். இத்தொண்டுகள் தூங்கிக் கொண்டிருந்த தம் நாட்டவரைத் தட்டி யெழும்பிய செயல்களாக இருந்தன. ஆன்ம நாட்டம் உள்ள பிற நாட்டவருக்கு வழிகாட்டியாகவும் இருந்தன. பெரியாருக்குப் புகழ் தடையின்றி வந்து சேர்ந்ததில் வியப்பில்லை.

விவேகானந்தர் பிறந்த ஆண்டு 1863. அவர் பள்ளிப் பயிற்சியும் பட்டதாரிப் பயிற்சியும் பெற்று சுயமாகச் சிந்திக்கும் காலத்தில் பாரத நாடு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. வறுமையும் அறியாமையும் ஒரு புறம். பொறுப்புடன் கடமையாற்ற வேண்டிய பலர் அற்ப விடயங்களிலேயே கவனஞ் செலுத்தி தம் சக்திகளை வீணே விரயஞ் செய்தனர். நாடு சீரழிந்த நிலையில் நின்று மீழுமாப் போலில்லை. மறு புறத்தில் அபிமானத்தோடு சீர்திருத்த முயற்சியில் ஈடுபட பல பெரியார்களும்

முன் வந்து கொண்டிருந்தனர். நாட்டின் அவல நிலையும் அதன் காரணத்தால் அந்நியர் ஆட்சி வேரூன்றிக் கொண்டதும் அவர்களது தேசாபிமானங் கொண்ட உள்ளங்களைப் புண்படுத்தியது. இப்பதவியில் வங்க தேசத்து அறிஞர்கள் முன்னிலையில் நின்றது எமது துறவிக்கு முன்மாதிரியாகவே இருந்தது. அந்நியர் அடக்குமுறைக்கு ஆளாகிய முதற் பிரதேசம் வங்கம். துன்ப அனுபவத்தில் நன்மையும் அடங்கியிருந்தது. பாரத நாட்டுக் கலாச்சாரமும் மேல்நாட்டவர் அதிகாரத்திற்கு மூலமாகவுள்ள நவீன விஞ்ஞானமும் முட்டும் பிரதேசமாகவும் இருந்தது. தாம் பின் தங்கி நிற்கும் காரணங்களைப் பற்றித் தியானிக்கும் வாய்ப்பு இதனால் ஏற்படுத்தப்பட்டது என்றும் கூறலாம். பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்த்தெடுத்த கலாச்சாரம் எனும் பெருமை சீரழிதுந் அந்நியர் ஆதிகத்துக்கு ஆளாகிய அவமானத்தினின்றும் மீட்க வேண்டுமெனும் தேசாபிமான ஆவேசம். அவர்களது கல்வி நிறுவனங்கள் வாயிலாக அவர்களது அதிகார பலத்தினதும் நிருவாகத் திறமையினதும் இரகசியங்களை உணரக்கூடியதாக இருந்தது. பக்குவம் அடைந்ததும். சீர்திருத்தப் போராட்டத்திலும் சுதந்தரப் போராட்டத்திலும் ஈடுபடத் தொடங்கினர். ஏனையோரைவிட விவேகானந்தர் ஒரு படி முன் சென்றார். தம்மை முழுமனே பொதுப்பணியில் ஈடுபடுத்த துறவே உகந்தது என்பதை உணர்ந்து லௌகீக உறவுகளைக் கைவிட்டு முழுநேரத் தொண்டரானார்.

துறவு பூண்டதும் சக துறவிகளோடு சமயப் பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபடலானார். நாட்டிலுள்ள சகல ஸ்தலங்களுக்கும் யாத்திரை சென்று வணங்கினார். பல ஞானிகளைத் தரிசித்து ஆசிகள் பெற்றார். வரலாறு விட்டுச் சென்ற அரும்பெருஞ் செல்வங்களைக் கண்டுகளித்து தனது தேசாபிமானத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டார், வடமேற்கே இமயமலை உச்சியிலுள்ள அமர்நாத் தொடக்கம் தெற்கெல்லையில் உள்ள கன்னியா குமரிமுனை வரை சென்றடைந்த அனுபவ உணர்வுகள் பிரதேச மொழி வேறுப்பாடுகள் இருப்பினும் இந்துக்களுக்கென பொதுப் பாரம்பரியம் ஒன்றுண்டு என்பதை இதய பூர்வமாக உணரவைத்தது. குருநாதரது ஞான உபதேசமும் சாஸ்திரிகப் பாண்டித்தியமும். அவரை இவ்வித பக்குவ நிலைக்குக் கொண்டு வந்ததை நாம் மறந்துவிட முடியாது, அவரது ஆன்மீக வளர்ச்சி இவ்விதமாகக் கைகூட வைத்தது இந்துக்களுக்கு அளிக்கப்பட்ட பெரும் வாய்பென்றே கருத வேண்டும்.

இறைபணி யென்பது சமய உபநியாசங்களும் சாஸ்திர ஆய்வுகள் மட்டும் என்ற கொள்கையைக் கொண்டவராக அவர் இருக்கவில்லை. மக்கள் பட்டினியாலும் நோய் பிணிகளாலும் துயருவது அவரது மனதை வருத்தியது. மக்கள் உணவின்றி வருந்தி வாழும் போது நான் மட்டும் ஒரு பிடி சோற்றைத்தானும் எவ்வாறு உண்பது எனக் கூறி பல தடவைகள் விரதம் இருந்திருக்கிறார். சக துறவிகளுக்கு, ஆன்மீக வளர்ச்சியோடும் சாஸ்திர அறிவோடும் முயற்சியை நிறுத்திவிடாது வியவஹாரிக்க உலகில் வாழ்வதற்குரிய சகல பயிற்சிகளும் தேவையென்பதை வலியுறுத்தியவர். அவ்வித முழுமையான பயிற்சி பெற்றவர்களே மக்கள் மத்தியில் கடமையாற்ற வல்லவர்கள் எனும் நம்பிக்கையைக் கொண்டவராயிருந்தார். சகல பயிற்சிகளும் அதன் வாயிலாக மக்களுக்குத் தொண்டு செய்யும் அனுபவமும் ஒருவரது ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுவன என்பதைக் கண்டார். மறு புறத்தில் நோய்க்கிடங் கொடுக்காத பயிற்றப்பட்ட தேகமும் பொருள்வள விருத்தியுமே மக்கள் மத்தியில் ஆன்மீக நாட்டத்தை உருவாக்கி சுதந்தர சமூகத்தை ஸ்திரப்படுத்த உதவும் முதற்கட்டம் என்பதையும் உணர்ந்தார்.

தூங்கிக் கிடக்கும் சமூகத்தை தட்டியெழுப்பி விழிப்புடன் இருக்கச் செய்வதோடு, கொண்ட கருமங்களை நிறைவு பெறும் வரை கைவிடாது இருக்கும்படியும் வேண்டிக் கொண்டார். தம்முள் அடங்கியுள்ள தெய்வீகத்தன்மையை உணரவைப்பதற்கு எவரும் சமூகத்தினின்றும் விலகி வாழ வேண்டியதில்லை யெனும் கர்மயோகக் கொள்கையைக் கடைப்பிடித்தார். புலன்களின் வஞ்சனைகளுக்குட்படாது மன உறுதியுடன் எப்பணியும் இறைபணியே எனும் தியாக உணர்வுடன் செயல்களில் ஈடுபடுவது ஆக்கமும் அழகுடையதும் நிலையான இன்பம் தரவல்லதுமாகும் எனும் பகவத் கீதை கூறும் உண்மையை நிலைநாட்ட முயன்றார். ஞானிகள் தோன்றி நெறிப்படுத்திய நாடு சீரழியாதிருப்பதற்கு அதுவே வழியாகும்.

அன்று கண்ட உண்மை என்றும் கடைப் பிடிக்க வேண்டியது. சுதந்திர போராட்டம் என்பது ஏதோ அதிகாரப் பங்கிற்கு நடத்தும் போராட்டமல்ல, மக்கள் தம் தெய்வீக சக்தியை வெளிக் கொணர நடத்தும் போராட்டம் அது. ஒவ்வொருவரும் தமது கடமைகளைச் செவ்வனே செய்யுமுகமாக புதியதோர் சமூகச் சூழலை உருவாக்க முயலும் போராட்டம் அது. அவ்வித மார்கத்தை நவீன பாரதத்திற்கு நினைவுறுத்தியவர் விவேகானந்தர். வைதீக சமயங்கள் வலியுறுத்தும் பண்புகளில் மிகச் சிறந்தது பணிவு. பரம்பொருளின் மகிமையை எவராலும் முழுமையாகக் கண்டுணர முடியாது என்பதை எமது ஞானிகள் வலியுறுத்தியுள்ளார்கள். இதன் காரணத்தால் வைதீகம் எனும் ஒரு பொதுக் குடையின் கீழ் பலவகை ஆன்மீகப் பரிசோதனைகள் நடத்தும் ஆய்வுநிலையம் என்றே பரந்த பாரத நாட்டை அழைக்கலாம். ஆன்மீக் ஞானம் என்பதற்கு ஏக போக உரிமை கோருபவர்கள் அங்கு இல்லை. ஆகவே சமய மாற்ற முயற்சியிலீடுபடுவோர் அங்கு இல்லை. மாறாக புதிய வழிமுறைகளையும் ஏற்று தம்முள் சேர்க்கும் மனப்பான்மைதான் அங்கு நிலவுகிறது, அவ்வித மனப்பான்மை கொண்டவராகவே சுவாமிகள் அமெரிக்க நாட்டை சென்றடைந்தார்.

பல சமயங்களைக் கொண்ட அரங்கு ஒன்று 1893ம் ஆண்டில் அமெரிக்காவில் கூடியது. அழையா விருந்தினராகச் சென்ற எம் துறவிக்கு அனுமதி தானும் வளங்கப்படுமோ எனும் சந்தேகம் ஆரம்பத்தில், அதற்கு முன்பாகவே, அவரது அறிவை ஆற்றலை கண்டு இன்புற்ற சில அமெரிக்கப் பெரியார்களது தீவிர தலையீட்டினால் மேடையில் இடங் கிடைத்தது. ஆன்மீக நிறைவு பெற்றதன் காரணமாக திடநம்பிக்கை, அதனின்றும் எழும் கருத்துக்களின் ஆழமும் தருக்க இயலும், அவற்றுக்குகந்த சொல்லாட்சியும் பேச்சுத் திறனும் அவர் கூறியதைக் கேட்ட மக்களைத் திகைக்க வைத்தது. தன் சமயத்தின் திறமைகளைக் கூறி விளம்பரம் செய்வார் என்று எதிர்பார்தவர்களுக்கு அவர் கூறியவை விந்தையாகவும் இருந்தது. மாயையின் காரணத்தால் வேற்றுமை வலியுறுத்தப்படுவதும் அஞ்ஞானம் உருவாக்கிய மயக்கம் அகற்றப்பட்டதும் வேறுபாடு அகலும் அத்துவிதக் கொள்கையே விளக்கப்பட்டது. அஞ்ஞானம் விலகிய நிலையில் அன்பு சுரக்க சகலரையும் சகோதரர்களென அழைத்த குரல் எல்லோரது உள்ளங்களையும் தொட்ட நிலை. அதுமட்டுமல்ல, மார்கங்கள் பலவாக இருந்தாலும் அவை யாவும் ஒருவனையே நாடிச் செல்கின்றன எனும் நம்பிக்கை குறித்த சமய விளம்பரப் பிரசாரத்தில் ஈடுபடத் தூண்டவில்லை. மாறாக ஒவ்வொரு சமயத்தவரையும் தத்தம் சமயங்களை செவ்வன ஒழுகும் படியும் வேண்டிக் கொண்டதும் திரண்டு வந்த மக்களது உள்ளங்களைக் கவர்ந்தது. இவ்வித மனப்பாங்கோடேயே மேல் நாடுகளில் ஒரு சில ஆண்டுகள் கழித்து மக்கள் மத்தியில் ஆன்ம நாட்டத்தைத் தூண்ட முயன்றார். அவர் இட்ட வித்து ஆன்மீக விசாரணையில் பல்லாயிரக்கணக்கான மக்களை ஈடுபடச் செய்திருப்பதை இன்னும் காணக்கூடியதாக்குகின்றது.

தான் தொடங்கிய பணியை தனது நாட்டிலும் பிற நாடுகளிலும் பரவலாகவும் திறம்படவும் செய்வதற்கு நிருவாகரீதியான செயல்பாட்டை உணர்ந்திருந்தார். அது மட்டுமல்ல, தானும் தன் சகாக்களும் இல்லாத போதும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டும் என்பதையும் நண்குணர்ந்திருந்தார். இங்குமங்குமாக இருந்த துறவிகள் மடம் இறுதியில் கல்கத்தாவிலுள்ள பேலூரில் நிலையாக உருவாயிற்று, பாரதத்திலும் இதர நாடுகளிலும் கிளைத்தாபனங்கள் பயிற்றப்பட்ட துறவிகளால் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் பேலூர் அலுவலகம் தலைமை தாபனமாகவும் வளர்ந்தது, கொழுந்துவிட்டுப் பரவுமாப்போல உலகெங்கும் கிளைகள் நிறுவி மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வளர்ந்ததன் இரகசியம் சக துறவிகளுக்கும் இதர ஊழியர்களுக்கும் விவேகானந்தர் கொடுத்துதவிய தலைமையே மூல காரணமெனலாம். பணத்தின் செல்வாக்கைக் கொண்டோ அதிகாரத்தைக் கொண்டோ ஒரு பெரும் நிருவாகப் பொறுப்பை திறம்படச் செய்ய முடியாது. இதனால் பணம் தேவையற்றது என்பதற்கில்லை. நிருவாகத்திறனுக்கு அதிகாரமும் அவசியம். ஆனால் அவை அன்புக்கும் அறிவுக்கும் உள்ளடங்கியதாக இருத்தல் வேண்டும். தொண்டர்கள் ஆக்கத்திறனுடன் இயங்குவதற்கு அவர்களது ஆளுமையையும் மதிப்பதாயிருத்தல் வேண்டும். விவேகானந்தர்

பூவுலகிலிருந்து மறைந்து எண்பது ஆண்டு களாகியும் நிருவாகம் சோர்வுறாது திறம்பட இயங்குவதன் இரககியம் அவர் வித்திட்ட நற்பண்புகளே யாகும். அவர் வழித்தோன் றலே எமது விபுலானந்தஅடிகளார். கதிர் காமம் தொட்டு வண்ணை வைத்தீஸ்வரன் வித்தியாலயம் வரை இயங்கும் (அல்லது இயங்கிய) நிறு வனங்கள் சுவாமி விவேகா னந்தர் அவர்கள் தொடங்கிய பணியையே நினைவுறுத்துகின்றன.

வாழ்ந்து நாற்பது வயதுமாகவில்லை. அச் சொற்ப ஆண்டுகளுள் உலகெங்கும் புகழ் பரவக்கூடியவகையில் சுவாமிகளது சாதனைகளின் இரகசியந்தான் என்ன? இயல்பாகவே அவரிடம் பல ஆற்றல்களை சிறு வயதிலிருந்தே காணக்கூடியதாக இருந் தது. விவேகம், ஞாபக சக்தி, அழகிய உடல், சமூக உணர்வு முதலியவற்றை சந்ததியென்றோ, கொடையென்றோ அல்ல பூர்வீக வினையின் பயனென்றோ விளக்கங் கொடுத்துவிடலாம். ஆனால் ஆற்றல்களைப் பக்குவப்படுத்தி பயனடையச் செய்வதற்கு தகுந்த வசதியும் சந்தர்ப்பங்களும் தேவைப் படுகின்றன. குடும்பம், சமூகச் சூழல், கல்வி பயில்வித்த ஆசிரியர்களும் ஏனைய பெரியார் களும் ஆற்றல்களைப் பக்குவப்படுத்துவதில் உதவினர்களென்றே கூறலாம். ஆற்றல்களுக் குரிய வசதி, சந்தர்ப்பங்கள் எட்டாதுவிடில் புகழ் பெற்ற விவேகானந்தராகியிருக்க முடியாது. (மறுபுறத்தில், புகழ்தர வல்ல பணிபுரியக்கூடிய பலர் வசதி சந்தர்ப்ப மில்லாது வாழ்க்கையை வீணே கழித்தார் என்றும் கூற வேண்டி யிருக்கின்றது).

ஆற்றல்கள் பயிற்சிகள் மட்டுமல்ல, தத்துவ தரிசனம் பெற குருவினது ஞான உபதேசமும் தேவை. தகுதிவாய்ந்த ஞான குருவைத் தேடும் பக்குவ நிலையை சுவாமி அடைந்தார், அதே வேளையில் தனக்குரிய குரு சந்தானத்தை உருவாக்க நல்ல தோர் சீடரை நாடி நின்றார் நிறைவடைந்தஞானி ஒருவர். இறை அருள் கிட்டுவதற்கு குரு வடிவில் நின்றவர் இராமகிருஷ்ண பரஹம் சராவார். பட்டப் படிப்புப் போர்வை களில்லை. சாதாரண ஏழைப் பிராமணத் தோற்றம். ஆனால் காளித்தாயை பயபக்தி யுடன் பூசித்தவர். பரம் பொருளை நேரில் கண்ட நிறைவு உடலை ஒளிமயமாக்கிற்று. புராணக் கதைகளும் சமூக பரம்பரைவாயி லாகப் பெற்றபகுத்தறிவு உபதேசங்களும் உவமானங்களும் நிரம்பிய நிலையில் இளம் நரேந்திரர் தொடுத்த கேள்விக் கணை களுக்குக்குத் தகுந்த பதில் கொடுக்கக் கூடிய வராயிருந்தார். ஆன்மநாட்டமுள்ள சீட ரை தன்மயமாக்கிக் கொண்டார். அன்பின் அடிப்படையில் உறவு வளர்ந்தது, தான் அனுபவித்த பேரின்பம் வையகத்திற்கே உரியது என்பதை உணர்த்த நரேந்திரரை யே பிரதம சீடராக்கிக் கொண்டார். குரு வின் ஆணையை நிறைவேற்றவே விவேகா னந்தர் எனும் துறவு நாமத்தைக் ஏற்று சுவாமிகளும் தொண்டாற்றத் தொடங் கினர், இன்று உலகெங்கும் இராமகிருஷ்ண மிஷன் இயக்கம் நிருவாக விதியாகத் திறம் பட சமய சமூகப் பணிகளில் ஈடுபடுவது இக்குரு சந்தானத்தின் தொடர்ச்சி என்றே கூறிவிடலாம்.

# முதலாமாண்டில் கற்பிக்கும் ஆசிரியரின் பிரச்சினைகள்

**கலாநிதி - செல்வி சிரோன்மணி இராஜரத்தினம்**

*பாடவிதான அபிவிருத்திச் சபை*
*கொழும்பு.*

முதலாம் ஆண்டிலுள்ள மாணவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆசிரியர் கல்லூரிகளில் கல்வி பெற்றிருக்கின்றனர். இவர்கள் சேவைக் கால பயிற்சிக்களுக்கும், முன்சேவை பயிற்சிகளுக்கும் சென்றுள்ளனர். ஆகவே இக்கட்டுரையின் நோக்கம் ஆசிரியர்கள் அறிந்தனவற்றை தொகுத்துக் கூறலும், அதன் மூலம் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் வழிநடத்தலுமேயாகும் முதலாம் ஆண்டில் பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் பல தரத்தினராகக் காணப்படுகின்றனர்.

சிலர் முன்பாடசாலைக்கு சென்றுள்ளனர், பாடசாலை சூழ்நிலையை ஏற்கனவே அறிந்திருக்கின்றனர். இவர்களில் சிலர் விளையாட்டுமுறை மூலம் எண்ணக் கருக்களைப் பெற்றிருக்கின்றனர்.

வேறு சிலர் நியமமான முறையில் எழுத, வாசிக்க, கணிதபயிற்சிகளை செய்ய பழகியுள்ளனர். அவர்கள் முன் பாடசாலையின் நோக்கங்களுக்கு ஏற்ப தாம் பெற்ற அனுபவங்களுடன் பாடசாலைக்கு வருகின்றனர், சில மாணவர் தமது அன்னையிடமிருந்து பிரியாமல், வீட்டுக்கு வெளியே என்ன நடக்கின்றது என்பதை அறியாமல் தமது அன்றாடக் கருமங்களைத் தாமே செய்யாது தம்மிலும் வயது முதிந்தவர்களை நம்பி வாழப் பழகிக் கொண்டவராக காணப்படுகின்றனர். பாடசாலைக்கு வந்ததும் பெற்றோருடைய எதிர்பார்புகள், பாடசாலையின் எதிர்பார்புகள் போன்றவற்றிலும் முரண்பாடு காணப்படுவதைக் காணலாம். பெற்றோர் தமது பிள்ளைகள் முதலாம் ஆண்டு தொடக்கத்திலேயே வாசிக்க வேண்டும், எழுதவேண்டும் என எதிர்பார்க்கின்றனர். முதலாம் ஆண்டு ஆசிரியர்களோ வெனில் விளையாட்டின் மூலமே பிள்ளைகள் கற்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர், பாடவிதான அபிவிருத்தி நிலையத்தினர் மாணவர் சுதந்திரமாக இயங்க வேண்டும், வகுப்புகளும் வகுப்புக்கு வெளியிலும் பிள்ளைகளைக் கவரக்கூடிய சூழல் அமைய வேண்டும் எனவும், விளையாட்டு மைதானம், பூந்தோட்டம் அழகாக அமைய வேண்டும் எனவும், வெளிக்கள விளையாட்டுகளிலும், வெளிக்கள சுற்றுலா மூலமே பிள்ளைகள் கற்க வேண்டும் எனவும் எண்ணுகின்றனர், ஆசிரியர்களோ வெனில் வகுப்பறைகளாக பிரிக்கப்படாத ஐந்து வகுப்புகளை உள்ளடக்கிய ஒரு மண்டபத்தில் எவ்விதமாக இத்தகைய கற்றல் சூழலை அமைப்பது எனவும் பணமின்றி விளையாட்டு மைதானத்தையும் உபகரணங்களை எங்ஙனம் பெறுவது என்றும் எண்ணத் தலைப்படுகின்றனர். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் எவ்வாறு செயற்படலாம்? பாடசாலைக்கு பிள்ளைகளை சேர்ப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே அடுத்தவருடத்தில் முதலாம் ஆண்டிற்கு எப்பிள்ளைகளை சேர்ப்பது என தீர்மானிக்கப்படுகின்றது, இப்பட்டியலை தயாரித்ததும் அப்பெற்றோரைக் கூப்பிட்டு ஒரு கருத்தரங்கினை பாடசாலை தயார் செய்து ஒரு வினாகொத்தின் மூலம் பிள்ளைக்களின் நிலையை அறியலாம், வினாக் கொத்தில் பிள்ளைகள் முன் பாடசாலைக்குச் சென்று இருக்கின்றனரா, எத்தகைய முன் பாடசாலை பிள்ளைகள் பெற்றிருக்கும் திறன் என்னென்பதை அறியலாம். இதே கட்டத்தில் முதலாம் ஆண்டிற்கு வரும் பிள்ளைகளிடமிருந்து எதிர்

பார்க்கப்படும் சமூக மெய்யெழுச்சி வளர்ச்சியினையும் திறன்களையும் பட்டியல் படுத்திக் கொடுக்கலாம். இவர்கள் பிறர் உதவியின்றி காலைக் கடன்களையும் உணவு, உடை, உறையுள், வேறு பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுதல், இடம், வலம் போன்றவற்றை அறிதல், சிவப்பு, நீலம், கருப்பு, மஞ்சள், பச்சை போன்ற நிறங்களை அறிதல், கத்தரிக்கோல்போன்ற வடிவங்களை வெட்டுதல், தனது பெயர் தந்தை, தயாயின் பெயர்களை அறிதல் போன்றவை அடங்கிய இத்திறன்களை நாம் எதிர்பார்க்கின்றோம் என்று பட்டியல் படுத்திக்கொடுத்தால் முன் பாடசாலை செல்லாத மாணவர் தன்னும் தமது பெற்றோரால் பாடசாலைக்கு ஆயத்தம் செய்யப்படுவர். இவ் ஆயத்தம் இன்றியமையாதது என்பதை இலங்கையில் கொழும்பு மாவட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

வசதி படைத்த குடும்பத்தினர், வசதி படையாத குடும்பத்தினர் என வேற்றுமையின்றி முன் பாடசாலைக்குச் சென்றுள்ள பிள்ளைகள், எண்ணக்கரு விருத்தி பெற்றுள்ளனர். அத்துடன் பாடசாலைக்கு வரும் பொழுது பாடசாலை சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சமூக மெய்யெழுச்சி நடத்தைகளைப் பெற்றுள்ளனர். இவர்கள் பெற்றுள்ள உள, சமூக மெய்யெழுச்சி விருத்தியினை முன் பாடசாலைகளுக்குச் செல்லாத பிள்ளைகள் பெறவில்லை என்பதே சில ஆய்வுகளில் கண்ட முடிவுகளாம், எனவே முன்பாடசாலை செல்லாத பிள்ளைகளின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஆயத்தம் செய்வார்களாயின் பிள்ளைகள் முதலாம் ஆண்டிலேயே செயல்பாடுகளில் தயக்கமின்றி ஈடுபட்டுத் தமது சக மாணவரினதும் ஆசிரியரினதும் கணிப்பை பெறுவர். ஆசிரியர்களும் மாணவரின் திறன்களை அறிவாரெனில் பிள்ளைகளுடைய தரத்துக்கேற்ப மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொழிற்பாடுகளை ஆயுத்தம் செய்வர்.

பாடசாலையில் வகுப்புகள் பிரிக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் கிடுகு பாய் மூங்கில் சட்டம் போன்றவற்றால் அமைத்த ஒரு தட்டியால் வகுப்புக்களை பிரிக்கலாம். மேசை கதிரையில்லாவிடத்து பாய் அல்லது தடுக்குகளைப் பயன்படுத்தி மாணவர்கள் நிலத்தில் இருந்து தம் தொழிற்பாடுகளில் குழுக்களாக இயங்கலாம். பாடசாலை சுத்தமாகவும் மாணவர்கள் நிறை உணவு பெற்று சுகதேகிகளாகவும் சுத்தமாகவும் வகுப்பில் காணப்படல் வேண்டும். இதற்கு ஒரு மரக்கறித்தோட்டம் இன்றியமையாதது, மாணவர்கள் தொழிற்படக் கூடிய முறையில் எழுத்தட்டைகள், விளையாட்டுகள், புத்தளிப்புக் கருவிகள். ஆக்க வேலைப் பாடுகள் தேவைப்படுகின்றன. குழந்தைகள் தாமே சுயமாக இயங்குவதற்கு சில உபகரணங்களையும் ஆக்க வேலைப்பாடுகளையும் அமைத்துக் கொடுப்பதில் பாடசாலையின் பங்களிப்பும் ஆசிரியரின் விடா முயற்சியும் அவசியம். சிறு குழந்தைகளுக்கேற்ற விளையாட்டு மைதானம் ஒன்றை ஊஞ்சல் கொண்டும், கயிற்றேணிகள் கொண்டும், பழைய றப்பர் சில்லு கொண்டும் (old car tyres) அமைக்கப்படல் வேண்டும். மாணவர் ஒரு சிறு பூந்தோட்டம் அமைத்தல் வேண்டும். இங்கே நீருடனும், மண்ணுடனும் விளையாடச் சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கப் பட வேண்டும். புதிய மாணவர் பாடசாலைக்கு தம் பெற்றோருடன் வரும் பொழுது ஏற்கனவே முதலாம் ஆண்டில் இருந்து இரண்டாம் ஆண்டிற்கு வகுப்பேற்றப்படவுள்ள மாணவர்கள் பூ மாலையுடனும் பூச்செண்டும் கலை நிகழ்ச்சிகளுடனும் புதிய மாணவரையும் பெற்றாரையும் வரவேற்கலாம்.

பாடசாலை என்பது ஒரு பூங்கா, அதில் உள்ளவர்கள் மலர்கள், வகுப்பறை ஒரு கலைக்கூடம், ஆசிரியர்கள் கலைஞர்கள் என்பதை பெற்றோரும் மாணவர்களும் உணர்ந்து செயற்படுவார்களாக.

# இலங்கையின் புதிய கல்வித் திட்டமும் பொதுக் கல்வியும்

**த. தியாகலிங்கம்**
B. A. Hons (Ceylon) B. Phil (Ceylon)
*சேவைக்கால பயிற்சி ஆலோசகர் (சமூகக்கல்வி)*
*ஆசிரியர் வி. ம. வி*

ஒரு நாட்டின் கல்வித்திட்டம் அந்நாட்டின் சமூக, பொருளாதார கலாச்சார தேவைகளுக்கு ஏற்ப அமைதல் வேண்டும். அத்துடன் இளைஞர்கள் முதியோர் என்ற வேறுபாடின்றி அவர்களின் அறிவு, திறமை மனப்பாங்கு விழுமியங்கள் ஆகியவற்றை விருத்தி செய்து, ஆளுமையை வளர்த்து நிகழ்கால தேவைகளையும், எதிர்கால அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய தாக இருப்பதுடன் அதற்கான வாய்ப்புக் களையும், வசதிகளையும் அனைவருக்கும் வழங்கக் கூடியதாக அமைதல் வேண்டும், அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளுக்கு தேசிய வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி, சேவைகளை பெருக்குவதற்கு ஏற்ற வகையில் மனித வளசக்தியை பயன்படுத்தக் கூடிய கல்வித்திட்டமே இன்று தேவைப்படுகின்றது.

கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உலகில் இன்று பல்வேறுவகையான கல்வித்திட்டங்கள் அறிமுகப் படுத்தப்படுகின்றன. கல்வித்திட்டங்களில் கல்வி கற்கும் மாணவனின் வயது, கலைத் திட்டங்கள், தேர்வுகள், கற்றல் முறைகள் ஆகியன அடங்குகின்றன. பொதுவாக இவற்றில் கொண்டுவரப்படும் மாற்றங்களையே கல்வித் திட்டமாற்றங்கள் எனக் கூறலாம், சுதந்திரத்திற்கு பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அனைத்தும் தமது அரசியல், சமூக, பொருளாதாரக் கொள்கைகளை அமுல் நடாத்துவதற்கு கல்வித்திட்டத்தையும் பாடசாலைகளையும் கருவிகளாக கையாண்டு வருகின்றன. இந் நிலைமை இலங்கைக்கு மாத்திரமன்றி ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் வளர் முக நாடுகளுக்கும் பொருந்தும், அரசியல் மாற்றங்கள் கல்வித்திட்டத்தினை மாற்றியமைப்பதுடன் சில வேளைகளின் தேசிய வளங்கள் வீணுக்கப் படுவதற்கும் காரணமாக அமைகின்றன. ஆட்சியைப் பொறுப்பேற்கும் அரசியல் கட்சிகளுக்கிடையில் கல்வியின் நோக்கங்கள் திட்டங்கள் பற்றி பொதுவான உடன்பாடின்மையே இதற்கு காரணமாகும்.

1977ம் ஆண்டில் பதவிக்கு வந்த அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு கல்வியமைச்சினால் 1981ல் வெளியிடப்பட்ட கல்வி வெள்ளையறிக்கையில் புதிய கல்விக் கொள்கை பற்றி முன்மொழியப்பட்டுள்ளது. இவை இன்று படிப்படியாக அமுல் நடாத்தப் பட்டுவருகின்றன. இங்கு ஆராயப்படும் புதிய கல்விதிட்டம் என்பது வெள்ளையறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட கல்விச்சீர் திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டதாகும், மேலும் இங்கு பொதுக் கல்வியில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களே அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களில் 85 சத வீதமானவர்கள் இதன் மூலம் பயன் பெறுகின்றனர். புதிய கல்வி திட்டம் 11 ஆண்டுகளுக்குரிய பொதுக் கல்வியையும் இரண்டு ஆண்டுகளுக்குரிய கல்லூரிமட்டத்திலான கல்வியையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பொதுக் கல்வித்திட்டமானது மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது. அவையாவன:

(i) ஆரம்பக்கல்வி (முதலாம் ஆண்டிலிருந்து ஆறும் ஆண்டுவரை) 5 - வயது 9 - வயது.

(ii) கனிஷ்ட இடை நிலைக்கல்வி (ஏழாம் ஆண்டிலிருந்து ஒன்பதாம் ஆண்டு வரை) 10 - வயது - 12 வயது

(iii) சிரேஷ்ட இடைநிலைக் கல்வி (பத்தாம் ஆண்டிலிருந்து பதினோராம் ஆண்டு வரை) 13, - வயது - 15 வயதுவரை.

ஆரம்பக்கல்வி (1 - 6 வருடங்கள்) முதலாம் ஆண்டிலிந்து ஆறும் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியைக் கொண்டது, மாணவர் சேரும் வயது 6 இலிருந்து 5 - ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. முன்னர் இருந்து வந்த பாலர் கீழ்ப்பிரிவுக்கு பதிலாக முதலாம் ஆண்டிலிருந்தே ஆரம்பிக்கின்றது. இதுவரை காலமும் ''தரங்கள்'' என அழைக்கப்பட்டவை யாவும் ஆண்டுகள் எனக்குறிப்பிடப்படுகின்றன. பாடசாலை கல்வியின் இறுதியாண்டு 13 வது ஆண்டாக அமைகின்றது. ஆரம்ப கல்வியில் சேரும் வயது ஒரு வருடத்தால் குறைக்கப்பட்டதற்கான காரணங்கள் தெளிவாகத் தெரியவில்லை. எனினும் மேலை நாடுகளுடன் ஒப்பிடும் போது ஐக்கிய சோவியத் சமவுடமைக் குடியரசு, டென்மார்க், நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளில் பாடசாலையில் சேரும் வயது 7 ஆகவும், மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் 6 ஆகவும், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் 5 ஆகவும் இருக்கின்றது. இந் நாடுகளில் பாடசாலை முன்னிலைக் கல்விக்கான வசதிகள் குறைவாக இருப்பதே இந்த வயதெல்லை குறைக்கப்பட்டதற்கான காரணமாக இருக்கலாம்.

மாணவரின் எதிர்கால ஆளுமை வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைவது ஆரம்பக் கல்வியாகும். இவ்வயதில் பாடசாலையில் சேரும் மாணவர்கள் வீட்டிலிருந்து வரும் போது பல அனுபவங்களுடன் வந்து சேருகின்றனர். எனவே இவர்களுக்கான கல்வி, ஆடல், பாடல், வரைதல் போன்ற அழகியல், கவின் கலைகளை வளர்ப்பதாக அமைகின்றது. இவ்வகுப்புக்கான பாடத்திட்டம் ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டமாகும், இதற்கான கலைத்திட்டம் பிள்ளையின் இயற்கையாய் அமைந்த உள்ளார்ந்த ஆற்றலை வளர்க்கும் வகையில் வாசிப்பு, கணிதம், எழுத்து, சொல்லாட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பாடத்திட்டமாக வகுக்கப்பட்டு கற்பிக்கப்படுகின்றது.

ஆரம்பக் கல்விக்கான மதிப்பீடுகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட மாட்டாது, அதற்குப் பதிலாக மாணவர்கள் விட்ட தவறுகளை திருத்துவதாகவும், கற்றல் செய்முறையை மதிப்பீடு செய்வதாககவும் அமைகின்றது, மதிப்பீடுகள் யாவும் இதற்கென தயாரிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு மாணவரின் கல்வி வளர்ச்சி தொடர்ச்சியாக மதிப்பிடப்படுகின்றது. ஆரம்பக் கல்வியின் இறுதியில் நடத்தப்படும் ஆறும் ஆண்டுப் புலமை பரீட்சையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட விருக்கின்றன. பெரும்பாலும் தனியார் கல்வி நிலையங்களில் மாதிரிப்பரீட்சை வினுத்தாள்களை அடிப்படையாகக் கொண்டே இப்பரீட்சைக்கு மாணவர்கள் தயார் செய்யப்படுகின்றனர். இம்முறை இனி நீக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

ஆரம்பக்கல்விக்கு அடுத்த நிலை கனிஷ்ட இடைநிலைக் கல்வியாகும், இது 6 ம் ஆண்டிலிருந்து 9 ம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியைக் கொண்டது, இதற்கான கலைத்திட்டம் ஆரம்பவகுப்பில் பெற்ற திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்வதுடன் தேசிய, சமூக, பொருளாதார தேவைகளைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு பின்வரும் ஒன்பது பாடங்கள் கற்பிக்கப்படும்.

(1) முதன் மொழி (5) விஞ்ஞானம்
(2) சமயம் (6) சமூகக் கல்வி
(3) கணிதம் (7) அழகியற் கல்வி
(4) ஆங்கிலம் (8) வாழ்க்கைத் திறன்
(9) சுகாதாரக் கல்வியும் உடற் கல்வியும். விரும்பினுல் பத்தாவது பாடமாக பயிற்சி சிங்களம் - தமிழை கற்பிக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றில் வாழ்க்கைத் திறன் என்ற பாடத்தினைத் தவிர ஏனைய பாடங்கள் 1972ம் ஆண்டிலிருந்தே கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இதில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள வாழ்க்கைத் திறன் என்னும் பாடமும் ஒன்றிணைக்கப்பட்ட பாடமாகும். இதுவரை

காலமும், வணிகவியல், மனையியல், மோட்டார் வாகனத் திருத்தல், மின்னியல் என்பன தொழில் முன்னிலைப் பாடங்களாக கற்பிக்கப்பட்டுவந்தன, எனினும் இலங்கை முழுவதிலும் ஆசிரியர் பற்ருக் குறை மற்றும், நிதிவசதிகள் இன்மையால் சரியான முறையில் போதிக்கப் படவில்லை, ஆனால் ''யுனெஸ்கோவின்'' வழிகாட்டலுடனும்? நிதியுதவியுடனும் வாழ்க்கைத் திறன் பாடம் 7, 8 ம் ஆண்டுகளில் பரீட் சார்த்தமாக கற்பிக்கப்படுகின்றது, வீட்டு வேலைகளுடன் கூடிய அடிப்படை மின்சாரம் பற்றிய அறிவு, உணவு தயாரித்தல் விவசாயம் ஆகியவற்றில் திறன்களை வளர்ப்பதை இப்பாடம் நோக்கமாகக் கொண்டுள்ளது. வெறும் கற்பித்தலாக வன்றி மாணவனின் செயற் திறனை மதிப்பிடுவதுடன் எழுத்துப் பரீட்சைகள் மூலமும் மதிப்பீடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது,

கனிஷ்ட இடைநிலைக் கல்வியில் 9 ம் ஆண்டு முக்கிய மானதாக கருதப்படுகின்றது. இவ்வாண்டிலேயே பெரும்பாலான மாணவர்கள் பாடசாலையை இடையில் விட்டு விலகுகின்றனர் என அறியப்பட்டுள்ளது, இக் குறைபாட்டினை ஓரளவு நீக்கும் பொருட்டும், மாணவன் தொடர்ந்து கல்வி பயிலவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கென நடாத்தப்படும் பரீட்சை மாணவர்களை விஞ்ஞானம், கலை என வகுக்காது மாணவர்கள் எந்த துறையின் திறமையும், ஆர்வமும் கொண்டுள்ளனர் என்பதை அறிய உதவும் என எதிர்பார்க்கப் படுகின்றது. முதன் மொழியும், கணிதமும் அகில இலங்கை ரீதியில் பரீட்சிக்கப்பட்டு வலைய அல்லது கொத்தணிப் பாடசாலை மட்டத்தில் மதிப்பீடு செய்யப்படும். மேலும் ஏனைய பாடங்களில் மாணவர்களின் செயற் திறன் தொடர்ச்சியாக மதிப்பிடப்பட்டு அவர்களின் முன்னேற்றம் A, B, C, D, E, என்ற தரங்கள் மூலம் வழங்கப்படும்.

சிரேஷ்ட இடை நிலைக்கல்வி 10 ம் ஆண்டிலிருந்து 11 ம் ஆண்டு வரையும் உள்ள காலப் பகுதியாகும், தேசிய ரீதியில் நடாத்தப்படும் க. பொ, த (சாதாரண) பரீட்சைக்கு மாணவர்களை தயார் செய்யும் பாடத்திட்டத்தைக் கொண்டுள்ளது, அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் இப்பரீட்சையின் முடிவுகளைப் பொறுத்தே உயர்கல்விக்கும், தொழில் நுட்பக் கல்விக்கும் மாணவர்கள் தெரிவு செய்யப் படுவர். இதற்கான கலைத்திட்டத்தின்படி தொழில் நுட்பக் கல்லூரிகளில் தமது கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் மரவேலை, உலோக வேலை, விவசாயம் ஆகிய தொழில் முன்னிலைப் பாடங்களில் கூடிய கவனம் செலுத்த ஊக்குவிக்கப் படுவர். தொழில் நுட்பக் கல்வியை விருத்தி செய்வதற்கு தொழில் நுட்ப கல்விக்கான அதிகார சபை யொன்று அமைக்கப்படும், இச்சபையே தொழில் நுட்பக்கல்விக்கு பொறுப்பாக இருப்பதுடன் தொழில் உலகுக்கு ஏற்ற வகையில் மாணவனின் அக்கறை, ஆற்றல், தனிப்பட்ட திறமை என்பனவற்றை விருத்தி செய்து தொழிற் சந்தையில் வேலைவாய்ப்பை பெற வழிகாட்டும்.

சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் இறுதி யாண்டில் நடாத்தப்படும் க. பொ. த. பரீட்சைக்கு பின்வரும் ஐந்து பாடங்களில் பரீட்சை நடத்தப்படும்.

(1) முதன்மொழி

(2) கணிதம்

(3) ஆங்கிலம்

(4) விஞ்ஞானம்

(5) சமூகக்கல்வி

மேற்குறிப்பிட்ட ஐந்து பாடங்களுக்கு மட்டுமே பரீட்சைத் திணைக்களத்தினுல் பரீட்சை நடாத்தப்படும் ஏனைய அழகியற் கல்வி, தொழில்னுட்ப பாடங்களுக்கு ஆசிரியர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள் மூலமாகவும் மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் பரீட்சை களினுலும் மதிப்பிடப்படும்.

சுகாதாரம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்குரிய பரீட்சை கொத்தணி அல்லது வலையப் பாடசாலை மட்டத்தில் நடாத்தப் படும். இப்பரீட்சையில் முதற் தடவையில் சித்தியயைத் தவறிய மாணவர்களுக்கு மேலும் ஒரு வருட காலச் சலுகை வழங்கப் படும். ஆனுல் பாடசாலையை விட்டு விலகி தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்ற முடியுமா என்பது பற்றி புதிய கல்வித்திட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் மற்றொரு அம்சம் மாணவரின் ஆளுமை விருத்தி

பற்றிய பதிவேடுகளாகும். இதில் மாணவரின் ஆளுமை பற்றிய மதிப்பீடுகள், தேசிய மாவட்ட, பாடசாலை மாவட்டத்தில், பெற்ற தரங்கள் ஆகிய தகவல்களைக் கொண்டதாக இருக்கும். பாடசாலையை விட்டு விலகும் மாணவர்கள் தொழில் பெறவும், தொழில் வழங்குவோருக்கும் இப்பதிவேடுகள் உதவியாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

பொது கல்விதிட்டத்தில் ஆங்கிலக் கல்வி தொடர்ந்து இரண்டாவது மொழியாக இருப்பதுடன் 3ம் ஆண்டிலிருந்து 11ம் ஆண்டுவரையும் கற்பிக்கப்படும். இதனைக் கவனிக்க தனியான பிரிவொன்று கல்வி மைச்சில் அமைக்கப்படுவதுடன் தொழில் நுட்பக் கல்விக்கான ஆங்கிலத்தைப் போதிக்க தனியான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

பொதுக் கல்வித்திட்டத்தில் சமய பாடபோதனை பற்றி எதுவும் கூறப் படவில்லை, அதற்காக தனியான குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது, மேலை நாடுகளிலும், இந்தியாவிலும் பொதுக் கல்வித்திட்டத்தில் சமயம் ஒரு பாடமாக இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கல்வி திட்டத்தில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனை வழங்குதலும் (School. guidance & Councilling) ஆகும் இம் முறை அபிவிருத்தியடைந்த நாடுகளில் பின்பற்றப் படும் முறையாகும். மாணவர்களின் ஆளுமை விருத்தியை பதிவு செய்து வைப்பதுடன் அவர்களுக்கு தொழிலுக்கு வழி காட்டுவதையும் அடிப்படையாக் கொண்டுள்ளது. இதற்காக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆலோசகர்களாக நியமிக்கப் படுவார்கள். இவர்களின் சேவை மாணவர்களின் ஆளுமையை வளர்க்கவும், நடத்தைப் பிறள்வுகளை தடுக்கவும் உதவியாக இருக்கும் என நம்பப்படுகின்றது, அத்துடன் மாணவர்களின் திறன், அறிவு என்பவற்றை ஆசிரியரும் பெற்றோரும் அறிய உதவியாக இருக்கும். மேலும் மாணவர்கள் கல்வியை முடித்துக் கொண்டு பாடசாலையைவிட்டு வெளியேறி வெளிஉலகம் பற்றியறியவும், தொழில் வாய்ப்புகள், வருமானம் என்பவற்றை, பற்றி மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதும் இதில் அடங்கும்.

இவற்றைத்தவிர இதுவரை நோக்கிய கல்வித்திட்டத்தினை அமுல் நடாத்துவதற்கு கல்வி நிர்வாகத்திலும் மாற்றங்கள் செய்ய வேண்டியதும் அவசியமாகின்றது. இதற்காக வெள்ளை அறிக்கையில் கொத்தணி அல்லது வலைய முறை என்னும் பாடசாலை முறை முன் மொழியப்பட்டுள்ளது.

இப்பாடசாலை முறையானது ஒரு குறிக்கப்பட்ட புவியியற்பிரதேச மொன்றில் மத்திய அல்லது மூலாதாரப்பாடசாலை (Core School) ஒன்றைத் தெரிந்து அதன் நிர்வாகத்தின் கீழ் அதனைச் சுற்றியுள்ள சிறிய பாடசாலைகளை கொண்டுவருவதகும். இவ்வாறு இணைப்பதனுல் ஒரு பாடசாலையில் காணப்படும் நூல்நிலையம், ஆசிரியர் சேவை, ஆய்வு கூடம், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை வசதியற்ற பாடசாலைகள் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும். அத்துடன் பாடசாலைகளுக்கிடையில் ஏற்றத் தாழ்வுகள் குறைந்து சமநிலை ஏற்ரப்பட சந்தற்பம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இம்முறையில் மூலதனச் செலவினையும் குறைக்கலாம் எனவும் கருதப் படுகின்றது. பல எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் மட்டக்களப்பு, கிளிநொச்சி மாவட்டங்களில் இவை பரீட்சார்த்த முறையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இதுவரை ஆராய்ந்த பொதுக்கல்வித் திட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களும், நிர்வாக சீர்திருத்தங்களும் மாணர்களின் கல்வித்தரத்தை உயர்த்தவும் நாட்டின் வளங்களை நன்கு பயன்படுத்தவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி மக்களின் கல்வித் தரமும் வாழ்க்கைத்தரமும் உயருமாயின் அதுவே கல்வியின் உன்னத நோக்கத்தை நிறைவு செய்யும் என எதிர்பார்க்கலாம்.

பரிசுக் கட்டுரை

# விவேகானந்தாக் கல்லூரியின் வளர்ச்சியில் மாணவரின் பங்கு

செல்வி க. அனுராதா

தனி மனிதர் பலர் சேர உருவாகுவது சமூகம். சமூகங்கள் பல சேர உருவாகுவது நாடு எனவே தனி மனிதருக்கும், சமுதாயத் திற்குமிடையே ஓர் பிரிக்க முடியாத நெருங் கிய தொடர்பு காணப்படுகிறது. தனி மனி தரின் உயர்வும் தாழ்வும் நாட்டினது உயர் வையும், தாழ்வையும் நிர்ணயிக்கின்றது. தனி மனிதன் எற்றம்பெற்று சீரும் சிறப் புடன் இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ் வதற்கு அடிநாதமாய் விளங்குவது கல்வி யாகும். இது கண்ணிலும் மேலாக போற் றப்பட்டது, போற்றப்படுவது.

இவ்வாறு சிறந்த கல்வியை வழங்குவது பாடசாலைகளாகும். பாடசாலைகள்தான் ஒரு நாட்டின் முள்ளந்தண்டாகும். அவை தாம் மக்களின் மன இருளை அகற்றி அறி வொளி பரப்பும் அற்புத நிலையங்கள், எதிர் கால சிற்பிகளை உருவாக்கும் கலைக்கூடங் கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக வளர்ந்து வரும் உலக மாற்றங்களுக்கு ஏற்ப மனித பண்போடு வாழ்வதற்கு பயிற்சிய ளிக்கும் பயிற்சிக் கூடங்கள்.

பாடசாலைகள் ஒருவனை முழு மனிதனுக் குவதற்கு சிறந்த முறையில் உதவுகின்றது. முழு வளர்ச்சி எனும் பொழுது அதில் நான்கு தன்மைகள் அடங்கியுள்ளன. அவை யாவன: மூளை வளர்ச்சி, மனவளர்ச்சி, உடல்வளர்ச்சி, சொற்திறன் வளர்ச்சி என்பன வாகும்.

''ஆகுக ஆக்குக'' என்ற வாசகங்களை அடித்தளமாகக் கொண்டு, மாணுக்கர் முன் னேற்றத்தையே தம் முன்னேற்றமாகக் கொண்டு அல்லும், பகலும் பாடுபட்டு அயராது சேவை செய்துவரும் மகாவித்தி யாலயம் விவேகானந்தா மகா வித்தியா லயம் எனக் கூறின் மிகையாகாது.

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என ஒளவையார் பாடியதை நிரூ பிக்கும் வண்ணம் எக்காலத்திலும் யாரா லும் அழிக்க முடியாத, கள்வர் பயமற்ற அருட்சொத்தான கல்விச்சொத்தை வழங் குவதில் இம் மகா வித்தியாலயம் தனது பங்கினை சிறப்புற செய்து வந்துள்ளது, வருகின்றது.

கொழும்பு வாழ் தமிழ் மாணுக்கரின் கலங்கரை ஒளி விளக்காக இருந்து சிறந்த சேவையாற்றி வருவது விவேகானந்தா மகா வித்தியாலயமாகும். தலைநகரில் தமிழ் மக்களுக்கென உலகெங்கும் சைவசமயத் தின் மணம்பரப்பிய விவேகானந்தரின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை கொழும்பு வாழ் தமிழ் மாணுக்கரின் மன இருளை அகற்றி ஒளியேற்றும் நிலையமாக விளங்கி வருகின்றது.

ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே தமிழுக்கும் சைவசமயத்துக்கும் இக்கல்விக் கூடம் பல துறைகளில் சிறந்து விளங்கும் பல அறிஞர்களையும், கல்விமான்களையும் அரசியல்வாதிகளையும் உருவாக்கித் தந்துள் ளது. சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டி டம் இன்று பல மாடிக் கட்டிடங்களுடன் விளங்குவது இதன் வளர்ச்சிக்கோர் சான் ருகும்.

ஒரு பாடசாலையானது மற்றொரு பாட சாலைக்கு முன்னோடியாக, முன்மாதிரியாக விளங்க வேண்டுமெனின் அது மற்றைய பாடசாலைகளைவிட சகல துறைகளிலும்

சிறந்து விளங்க வேண்டும். விளையாட்டு, கல்வி, கலைகள், பழக்க வழக்கங்கள் சமுதாயத்தில் மற்றவருடன் பழகும் விதம் என்பன பொதுவாக பாடசாலையின் தரத்தை அளக்க உதவிடும் கருவிகளாக காணப்படுகிறன்ன.

தனி மனிதர் பலர் சேர உருவாகுவது சமுதாயம். இச்சமுதாயம் திருந்த வேண்டும் எனின் தனி மனிதர் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே திருத்திக்கொள்ள வேண்டும். சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க முக்கிய பங்கு வகிப்பவர்கள் மாணுக்கர்களே. நாளைய உலகை ஆளப்போகும் இவர்கள் சிறந்த அறிஞர்களாக, பண்பாளராக விளங்குவது மிக மிகப் பிரதானமாகும். இவ்வாறு அறிஞர்களாக, பண்பாளர்களாக மாற்றும் பெரும் பணியை செய்கின்ற பாடசாலைக்கு மாணுக்கர்கள் விசுவாசம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். பாடசாலையின் மீது பற்று உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

எவ்வாறு ஒருவன் தனது சொந்த உடமைகளை பேறுகின்ருனே அதனைப் போன்று மாணுக்கர் தமது பாடசாலையின் சொத்தையும், பாடசாலையின் சூழலையும் தமது சொந்த உடமைபோல சிறப்புற பேணிவரல் மிக மிக அவசியமாகும்.

தீயினுல் அழியாத, கள்வர் பயமற்ற, காலத்தால் அழியாத சொத்தான கல்விச் சொத்தை வழங்கும் பாடசாலைகள் மற்ற பாடசாலைகள் குறிப்பிட்டுச் சொல்லும்படி மாணுக்கர் தமது கல்வியினை அபிவிருத்தி செய்து மற்றைய பாடசாலைகளிலும் பார்க்க சிறந்த தேர்ச்சி பெறுதல் மிக மிக அவசியம். இதற்கு அவன் கடின உழைப்பை மேற்கொள்ள வேண்டியவன் ஆக இருக்கிருன்,

கல்வியில் மட்டுமல்லாது பேச்சுப் போட்டி, கட்டுரைப் ேபட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் எல்லாம் கிராமிய, மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியில் பங்கு பற்றி பரிசில்களை பெற்றுக் கொடுத்தல் அவசியம். மேலும் சமுதாயத்தில் தன்னைவிட சிறுவர், சமவயதினர், முதியோர் போன்றவருடன் சிறப்புற பழகுவதன் மூலம் பாடசாலைக்கு நற்பெயரையும் பெரும் புகழையும் ஈட்டிக் கொள்வதுயும் மிக அவசியம்,

அறிவுள்ள மக்கள் வாழ்கின்ற நாட்டை அறிவுள்ள நாடு என்றும், அறிவு குறைந்தவர் வாழ்கின்ற நாட்டை இருண்ட நாடு என்றும் கூறுவர். எனவே நாட்டிற்கு சிறப்பை தேடித்தருபவர்கள் அந்நாட்டு மக்களாகும். ஒரு பாடசாலை பெரும் புகழுடன் விளங்குகின்றதென்ருல் அதற்கு காரணம் அவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதனுல் அப்பெயர் ஏற்பட்டது என்பதாகும். ஆலயம் போன்ற எமது பாடசாலைக்கு நற்பெயரை ஏற்படுத்திக் கொடுக்க, அப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் அயராது உழைக்க வேண்டும். பரீட்சைகளில் அதிசிறந்த தேர்ச்சிபெற்று இலங்கையிலேயே அதிசிறந்த பாடசாலை என்ற பெயரைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்ற பற்பல போட்டிகளில் பங்குபற்றி விவேகானந்தா கல்லூரி மாணவர்கள் எல்லாப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டார்கள் என பலவாருக கூறுதல் வேண்டும்.

அறிவுத் துறையில் முன்னேறினுல் மட்டும் போதாது, ஒழுக்க சீலர்களாகவும் விளங்க வேண்டும். பொது வைபவங்களிலும், சமய நிகழ்ச்சிகளிலும் மற்றும் வைபவங்களிலும் கலந்து கொள்ளும் போது ஒழுக்க சீலர்களாகத் திகழவேண்டும். இவர்களது நடவடிக்கைகள் ஏனைய மாணவர்களுக்கு ஓர் உதாரணமாக விளங்கவேண்ம்டும், இம் மாணுக்கர்களின் நடவடிக்கைகளை பார்த்து, விவேகானந்தா கல்லூரி மாணவர்களைப்போல் நீங்களும் ஒழுக்கசீலர்களாக, பண்பாளர்களாக விளங்கவேண்டும் என மற்றவர் கூறுமளவுக்கு நாம் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க வேண்டும்.

''கற்ருேருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு'' என்பதற்கமைய விவேகானந்தக் கல்லூரி மாணவர்கள் உயர்கல்வியில் தேர்ச்சிபெற்று, புலமைப் பரிசில்களைப் பெற்று, உயர் தொழிலில் ஈடுபட்டு எமது கல்லூரிக்கு புகழ் சேர்க்கவேண்டும். பல அறிஞர்கள் தாம் விவேகானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என பெருமிதத்துடன் கூறிக்கொள்ளும் அளவுக்கு நாம் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்.

மாணுக்கர்கள் சமுதாயத்தில் பழகும் விதத்தைக் கொண்டே அவர்கள் கல்வி கற்கும் பாடசாலையின் தரத்தை பெரியோர், சுற்றத்தார் ஆகியோர் மதிப்பிடுகின்றனர், ''எதிர்கால மன்னர்களாகிய,' இம்மாணுக்கர்கள் ''தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்பதற்கமைய தாம் கல்வி கற்கும் நிலையத்தை தெய்வத்திற்குச் சமமாகக் கருதி பேணிவரல் மிக மிக முக்கியமான தாகும்.

விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் கல்விகற்று அப்பாடசாலையிலேயே ஆசிரியர்களாக பணியாற்றும் பலர் நம்பாடசாலையில் காணப்படுகின்றனர்கள். அவர்களுள் திருமதி P. சுப்பிரமணியம், செல்வி S. கலைவாணி திருமதி ஜோ அனு, திருமதி நவநீதம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

எங்கு அடக்கமும், பணிவும், சுறுசுறுப்பும் உடைய மாணவர்கள் இருக்கின்றனர் களோ அங்கு எல்லாம் சிறப்புற இருக்கும், இயங்கும் என்பதற்கமைய பாடசாலையில் தம்பணியை உணர்ந்து செயலாற்றின், தமது பொறுப்புக்களையும், கடமையையும் உணர்ந்து முயற்சியுடன் செயலாற்ற முனை யின் அங்கு ஒரு திடகாத்திரமான அடித்தளத்தை கொண்ட பாடசாலையைக் காண லாம்.

மாணவன் இல்லையேல் பாடசாலை இல்லையெனும் கூற்றுக்கமைய மாணவனுனவன் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்து செயலாற்றின் அங்கு ஒரு புனிதமான கல்விக் கூடத்தைக் காணலாம், ''கண்ணுடையோர் என்போர் கற்ருேர்'' ''முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்'' எனும் வாசகத்திற்கமைய மாணுக்கர்களாகிய நாம் எமக்கு அறிவினை பரப்பும் அற்புத நிலையங்களான பாடசாலைகளிலே திறம்பட கல்வி கற்று இச்சமுதாயத்தில் ஓர் உயர்ந்த நிலைக்கு வந்து நாம் கல்விகற்ற பாடசாலைகளுக்கு அளப்பரிய சேவைகள் செய்தய வேண்டும். கல்லாதவரின் முகத்தில் இருக்கும் புண்களைப்போல் எமக்கும் புண்கள் இல்லாமல் இருக்க நாம் உயரிய இலட்சியங்களை நோக்காகக் கொண்டு சிறு வயதிலிருந்தே பாடுபட்டு கல்விகற்க வேண்டும். இக்கல்விக் கூடத்தை ஒரு புனித ஸ்தாலமகக் கருதி பேணிவரல் மிகமிகப் பிரதானம்.

ஆகவே என்றென்றும், எங்கெங்கும், எப்போதும் விவேகானந்தா மகா வித்தியா பயத்தின் கல்வி நிலைபெற, கல்விக்கூடம் நிலைபெற மாணவர்களாகிய நாம் சிறப்புற பாடுபட வேண்டும். நமது பங்கினை சிறப்புறச்செய்து சிறப்புற உழைக்க வேண்டும்.

வாழ்க விவேகானந்தா மகாவித்தியா லயம்! வளர்க கல்லூரியின் புகழ்!

(மேற் பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை)

WITH BEST COMPLIMENTS

FROM

# MARIKAR (LANKA) LTD.

WHOLESALE DISTRIBUTORS OF BATA SHOES

30, PRINCE STREET,
COLOMBO – 11.

BRANCH:
132, TRINCOMALEE STREET
KANDY
PHONE: 08 - 23456

PHONE; 546380
TELEGRAMS "SAYMARIKAR"

---

WITH BEST COMPLIMENTS

# LATHA TRADING CO.

GENERAL MERCHANTS

NO. 59, DAM STREET
COLOMBO 12.

PHONE: 34907

**With Best Compliments**

**From**

# SOOSEY MARIYAN FERNANDO & SONS

(DRY FISH DEALER)

NO. 48, 4TH CROSS STREET,
COLOMBO 11.

**Grams: "TYNER"** **Phone: 28863**

---

WITH BEST COMPLIMENTS

FROM

# NEW GANESHA STORES

WHOLESALE AND RETAIL DEALERS IN GRAINS FOOD STUFFS
AND GROCERIES AND IMPORTERS CONSUMER ITEMS

**18, SRI KATHIRESAN STREET,**
**COLOMBO 13.**

Phone: 26564
20579

WITH BEST COMPLIMENTS

FROM

**A. C. MICHAEL J. VICTORIA**

(PHOTOGRAPHER)

"FOTO NIRMAL"
306, WOLFENDHAL STREET,
COLOMBO-13.

DIAL-32210

---

WITH THE BEST COMPLIMENTS

FROM

**SRI VIJAYA LALITHAA**

**JEWELLERY MART**

78, SEA STREET,
COLOMBO 11.

**PHONE: 26042-33584**

WITH BEST COMPLIMENTS

FROM

NATHAN & COMPANY

71, 4TH CROSS STREET,
COLOMBO 11

T'Phone: 29241

WITH THE BEST COMPLIMENTS

CENTRAL ISMALIA GRINDING MILLS

GRINDERS & MANUFACTURERS OF COFFEE POWDER.
CHILLY & CURRY POWDER

331, SEA STREET,
COLOMBO.11.

WITH BEST COMPLIMENTS

FROM

P. L. S. V. SEVUGAN CHETTIAR

140, ARMOUR STREET,
COLOMBO - 12.

WITH BEST COMPLIMENTS

FROM

# DUBAI BANK LTD.

48, MUDALIGE MAWATHA,
P.O. BOX 325
COLOMBO - 1.

T. PHONE; 33719, 28916 TELEX: 21724 DUBANK CE

WITH BEST WISHES FROM:

NEW ARIYA BAWAN

VEGETARIAN HOTEL

NO. 9, DAM STREET

COLOMBO - 11.

T: PHONE: 35362

WITH COMPLIMENTS FROM

THE MEIHANDAN PRESS LIMITED

PRINTING & PACKAGING

SPECIALIST IN CALENDARS & PLASTIC DIARIES

161, SEA STREET, COLOMBO - 11.

TEL; 29345

With Best Compliments From;

## NEW KALYANI JEWELLERY MART

JEWELLERS & PAWN BROKERS

95, SEA STREET, Phone- 2 5 3 4 3
COLOMBO-11

---

WITH BEST COMPLIMENTS FROM

QUALITY JEWELS 22 CARAT ONLY

## SANGEETHA GOLD HOUSE

JEWELLERS & PAWN BROKERS

129, Sea Street,
Colombo-11

Phone 3 2 5 0 2

வைர விழாக்காணும் விவேகானந்த மகா வித்தியாலயத்துக்கு

எமது நல் வாழ்த்துக்கள்

சுவை மிகு சுத்தமான சைவ உணவுக்கு

## கோமதி விலாஸ்

142, செட்டியார் தெரு,

கொழும்பு - II

தொலைபேசி: 34144

WITH BEST WISHES FROM

## SREEM JEWELLERS

121 SEA STREET

COLOMBO-II

PHONE 31193

VISIT:

# MEDI SPOT

180 1/1 George R De Silva Mawatha
Kotahena

FOR.
1. Laboratory Investigations.
2. Medical Check-Ups Prior to Leaui Sri Lanka on Holidays, Overseas Assignment Etc.

Hours. of Consultation 8 a. m. - 1 p. m. 3.30 - 7-30 p. m,
ASSURING YOU OF OUR BEST SERVICES
WITH COMPLIMENTS FROM
MANAGEMENT

---

*With Best Compliments*

*From*

# Devalopment Engineering Enterprises Ltd

270, FERGUSON ROAD,
COLOMBO-15.

MANUFACTURERS OF RE INFORLED CONCRETE POLES

(R. C. POLES) CED AND SLTD DESINGNS

TELEPHONE: 522092

LATSHA INDUSTRIES LTD.
FREUER ENTERPRISE LTD.
AUTOMART LIMITED
SALEEM STORES (PVT) LTD.

# M. S. M. MOINUDEEN

Director

Office:

548, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO-10.
SRI LANKA.

PHONE: 32932, 28567, 21033
TELEX: 21392 SHARIFF - CE
CABLES: "LAST" COLOMBO
"VERATINGI" COLOMBO

Residence

NO. 3, HORTON TERRACE
COLOMBO-7.
SRI LANKA.

PHONE: 91570

---

*With Best Compliments*

*From*

# Asean Industrial Tradeways

DEALERS IN: HARDWARE ENGINEERING TOOLS

**307 - 1/3, OLD MOOR STREET,**
**COLOMBO-12**

T. P: 548332

WITH BEST COMPLIMENTS

FROM

# BALAGANESH'S

MANUFACTURING JEWELLERS

156, SEA STREET
**COLOMBO-11.**

TEL: 35314

WITH BEST COMPLIMENTS

FROM

# RANMUTHU TRADERS

GENERAL HARDWARE MERCHANTS
AND IMPORTERS

OLD MOOR STREET,
COLOMBO 12

T'Phone: 22281
540924

WITH BEST COMPLIMENTS

FROM

# RAJAN JEWELLERY

ORDERS UNDERTAKEN & EXECUTED PUNCTUALLY

156/11, SEA STREET,
COLOMBO-11. T'P 547752

WITH BEST COMPLIMENTS

FROM

# R. PANJANATHAN

## JEWELLERY

(ORDER TAKING)

**107 B/14, BANDARANAYAKE MAWATHA**
(Inside Temple Garden)
**COLOMBO - 12**

WITH BEST COMPLIMENTS

FROM

# NADARAJAH - THANABALAN

**216, Pickerings Road,**
**Kotahena,**
**COLOMBO-13.**

---

WITH BEST COMPLIMENTS

FROM

# FLYWELL TRAVELS

TICKETING ACENTS AND TOUR OPERATORS

**540, Bristol Street,**
**COLOMBO-1**
Sri Lanka

Telephone: **35233**
Telex: **21918**
**22425** PERIMRCE
Attn. FLYWELL TRAVELS

WITH BEST COMPLIMENTS

FROM

W. A. SUNIL JAYALATH

ENGINEERS REGISTERED BUILDING & ELECTRICAL CONTRACTORS
SUPPLIERS OF ALL BUILDING MATERIALS

898, GOTHATUA
ANGODA

TEL: 578-083

WITH BEST COMPLIMENTS

FROM

ANISA & Co.

GENERAL MERCHANTS & COMMISION AGENTS

96, 4TH CROSS STREET,
COLOMBO 11,

T'Phone: 2245

பரிசுக் கட்டுரை

# அறிவுப் பணியில் விவேகானந்தா

செல்வி ஏ. பவானிவள்ளி

நான் முதன் முதலாக இந்தப் பாட சாலையில் கல்வி கற்க வந்தவேளை இன்றைய மகேசன் கட்டிடத்தின் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இப்பள்ளியின் வாயிலின் முதற்படியில் கால் பதித்த போது என் பார்வை சற்றே உயர்ந்தது. வெண்துகில் பூண்டு அப்பழுக்கற்ற தூய்மையின் உருவாய் ஆகுக! ஆக்குக என என்னை ஆசீர்வதிக்கிருள் அன்னை கலைவாணி. கல்வி தருபவள் கலைமகள் என்பதால் அவள் கல்விக் கூடங்களின் வாயிலில் எல்லாம் காட்சி தருவாள் என நினைத்தேன், அறிவு முதிர்ந்த போது எமது பள்ளிச் சின்னத்தின் சிறப்பு அதுவென அறிந்து கொண்டேன், திறமை மிகுந்த நிர்வாகத்தின் பயனுய் எமது பாட சாலை முன்னேற்றப் பாதையில் துரிதநடை போடத் தொடங்கியது. அதிபர், ஆசிரியர், மாணுக்கர் யாவர் மனதிலும் பெருமிதத் தோடு உவகை பொங்க விவேகானந்தா அறிவுத்தீபம் குன்றிலிட்ட தீபமாய் பிரகாசிக்கத் தொடங்கியது. இது 1972 ஆம் ஆண்டு இக்கல்லூரியில் அடிவைத்த அண்ணல் அமரர் சு. மகேசன் அவர்களின் அரிய உழைப்பின் விளைவு இங்கு நிகழ்ந்த விழாக்களிலெல்லாம் மாணுக்கரின் அறிவொளி துலங்கும் ஆற்றலின் வெளிப்பாட்டால் கேட்போரும், பார்ப்போரும் வியந்திட விளங்கின. உயர்வகுப்பு மாணுக்கர் தேர்ந்த ஆசிரியர்களின் போதிப்பால் விஞ்ஞான, கணித, வர்த்தக பாடங்களில் திறமை மிக்கோராய் விளங்கினர்.

க. பொ. த. உயர்தரம், க, பொ. த. சாதாரண தரம், தேசிய கல்வி பொதுத் தராதரம் போன்ற பரீட்சைகளில் அதிதிறமைச் சித்தியுடன் அதிகமானேர் சித்தியடைந்தனர். நவோதய புலமைப் பரிசிற் பரீட்சையில் 1977 ஆம் ஆண்டு முதன் முதலாக சித்தியடைவோர் தொகை சடுதியாக அதிகரிக்கப்பட்டது. அன்றிலிருந்து தொடர்ச்சியாக திறமைச் சித்தியும், சித்தியடைவோர் தொகையும் அதிகரித்தது.

''வாசிப்பு மனிதனை முழுமையாக்குகிறது'' இப்பழமொழிக்கு ஒப்ப அறிவுச் சுரங்கமாய் விளங்கும் ஒரு பெரிய வாசிகசாலை அமைந்துள்ளமை மாணுக்கராகிய நாம் செய்த பெருந்தவப் பயனேயாகும்.

வாசிப்பின் வழியாகப் பெற்ற அறிவு கட்டுரை, கவிதை, கதை எனப் பல கோலங்கள் பூண்டு வெளிப்பட்டு பாடசாலைக்குள்ளும், ஏனைய பாடசாலைகளுக்கிடையிலும், வட்டார, மாவட்ட, தேசிய மட்டங்களிலும் தட்டிக்கொண்ட, கொண்டிருக்கும், கொள்ளப்போகும் பரிசுகளோ ஏராளம்! ஏராளம்!! இக்கல்லூரியினுல் தேசத்திற்கு கிடைத்த எழுத்தாளர்கள் பலர். எம் பாடசாலை மாணுக்கர் பேச்சை விட்டு வைத்தனரா? அல்ல! விவேகானந்தாவில் விளைந்த எழுத்தாளர் எண்ணிலர். வானெலியும் பலரை வாரி அணைத்துக் கொண்டது. வெளியுலகம் வியப்புக் கொண்டது.

இசையிற் சிறந்த இசையாசிரியர்களின் பயிற்றுவித்தலில் அங்கே கூவிய குயில்கள் தான் எத்தனை. வேறு பள்ளியின் விழாக்களில் இசைபொழிய எங்கள் குயில்களுக்கு அழைப்பு வரும். இவ்வாறு அரங்கமே இரசிக்க நிகழ்ந்த இசைக் கச்சேரிகள் பற்பல, தாளவாத்தியக் கச்சேரியோ தன் நிகரில்லாப் புகழ்பெற்றது,

நாடகப் போட்டிகளில் எமது கல்லூரி மாணுக்கர் மேடையேற்றிய நாடகங்களில் பரிசு பெருமற் திரும்பியது மிகவும் அரிது. தேர்ந்த நடிகர்கள் பலரை தேசத்திற்கு அளித்துள்ளது எமது பாடசாலே.

பல்கலை ஞானமும் வல்லமையும் விளையும் நிலம் அல்லவா எங்கள் விவேகானந்தா.

''தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு'' என்பது வான்புகழ் வள்ளுவர் வாக்கு. எல்லா மாந்தர்க்கும் மணற்கேணியில் மறைந்திருக்கும் நீர்போல அறிவு அமைந்திருக்கும், ஆனுல் தோண்டுமிடத்து மணற்கேணியில் அவ்வூற்றுப் போல், கற்றவாகிய தோண்டுதலால் அறிவு எனும் ஊற்றுத் தோன்றும்,

கற்றலுக்குக் கற்பித்தல் அவசியம். எனவே இவ்வழி அறிவு சிறந்த ஆசான்கள் எமக்கு கற்பித்து அறிவெனும் ஊற்றைத் தோண்டினர், கல்வி எனும் அமுதினை எம் ஆசான்கள் எமக்கு ஊட்டினர்.

கற்கக் கசடறக் கற்று உயர்ந்தோர் எம் பாடசாலையிற் பலர். ''மன்னனுக்கு தன் நாடல்லால் சிறப்பில்லை, ஆனுல் கற்ருேர்க்கு சென்ற இடமெலாம் சிறப்பு'' கற்ருேர்க்கு சென்ற இடமெலாம் சிறப்பு உண்டாவுதற்கு அவர்களின் அறிவுத் திறனே காரணமாகும். சென்ற இடமெலாம் சிறப்புத் தரும் அரும் பெருஞ் செல்வமாகிய கல்வியை எமக்கு வழங்க உதவுவதே விவேகானந்தாவின் சீரிய பணியாகும். இப்பணியில் இப்பள்ளி படைத்த சரித்திரம் மிகப் பெரியது. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கல்வித் தெய்வத்தின் அருளாட்சியின் வல்லமையினுல் நாம் உயருகிருேம்.

வீரமும், கல்வியும், ஞானமும் எழும் புகழ் விளைநிலம் எங்கள் விவேகானந்தா என நாம் தினமும் பாடும் எம் பாடசாலைக் கீதத்தில் எத்தனை கருத்தாழம் உடையது.

இந்த விளைநிலத்தில் விளைந்த முத்துக்களே எம் சொத்துக்கள் ஆகும்,

சிறந்த மாணுக்கரை உருவாக்குவதற்கு தலைநகரிற் தலைசிறந்து விளங்கும் எம் கல்லூரி இன்று 60 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. எம் பாடசாலை பல அறிஞர்களை ஆக்கியுள்ளது, இன்று நாம் அறிஞராவோம், நாளை பல அறிஞர்களை உருவாக்குவோம்,

ஆகுக! ஆக்குக.

(மத்திய பிரிவு-முதலாம் இடம்)

---

என்னைப் பொறுத்தவரை தீண்டாமை இந்து சமயத்தின் வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கும், நான் திரும்பத் திரும்பக் கூறியிருப்பது தீண்டாமை வாழ்ந்தால் இந்துமதம் அழியும், ஏன் இந்தியாவே அழியும். அங்கனமல்லாது இந்துமக்களின் இதயங்களிலிருந்து தீண்டாமை வேரோடு ஒழிக்கப்படுமாயின், பின்பு இந்துமதம் நிச்சயமாக உலகத்தையே வாழவைக்கும் தன்மை உடையதாகும்.

காந்திஜி

---

பரிசுக் கட்டுரை

# நாமும் எமது பாடசாலையும்

செல்வி வி. சியாமளாவாணி

கொழும்பு மாநகரிலே கல்விப் பணியும் சைவப்பணியும் செய்து விளங்குகின்ற ஒரே ஒரு பாடசாலை விவேகானந்த மகா வித்தியாலயமாகும். இப்பகுதியில் வாழும் சைவ மக்களும், தமிழ் மக்களும் சுதந்திரமாகக் கல்வியில் முன்னேறுவதற்கு அமைந்தது எமது பாடசாலை என்றால் அது மிகையாகாது. நாமும் நமது சகோதரர்களும், நமது பெற்றோர்களும் இப்பாடசாலையில் கல்வி கற்கின்றவர்களும், கற்றவர்களுமாக உள்ளோம், நமது பாரம்பரியமும், பரம்பரையும் எமது விவேகானந்தா மகா வித்தியாலயத்தின் சிறப்பிற் தங்கியுள்ளது.

''கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்? என்பது திருவள்ளுவர் வாக்கு. அதாவது கல்வியின் நோக்கம் இறைவனை வணங்கி நல்வழி அடைதல் என்பதாகும். அந்த பொய்யாமொழிக் கிணங்க அறிவுடன் தெய்வீகத்தையும் இணைத்து கல்வி கற்பிக்கும் மாண்பு எமது பாடசாலைக்கே உண்டு.

எமது பாடசாலை ஞானி விவேகானந்தரின் நாமம் பூண்டுல் 1926ல் ஆரம்பிக்கப்பட்டது. சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண பரமஹம்சரை குருவாகச் பெற்றவர், மேன்மைகொள் சமயத்தை உலகெல்லாம் விளங்கச் செய்தவர். கல்வியில் வரம்பு கண்டவர், இவரது அருளோடு ஆரம்பித்ததினால் தான் இன்று பெருமையுடன் இவ் வைரவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அரசாங்கம் எமது பாடசாலையை பொறுப்பேற்கும் வரை விவேகானந்த சபையினரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. எனவே இவ்வேளையில் விவேகானந்த சபையின் பணிகளையும் நினைவுகூர வேண்டும். அவர்களின் அணைப்பின் காரணமாவேதான் சைவத்தின் மணம் எமது கல்லூரியில் இன்றும் திகழ்கிறது. அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து வளர்க்கும் பணி நம்முடையது. மேல்நாட்டு நாகரிகத்துக்கும் மொழிக்கும் அடிபணிந்த கொழும்பு மாநகரிலே நாம் வாழ்ந்தாலும்கூட சைவத்திற்கு, தமிழ் பண்பாட்டிற்கு குந்தகம் ஏற்படாது எமது கல்லூரி திகழ்கிறது, அதற்கு நாமும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

''நன்றும் தீதும் பிறர் தர வாரா'' என்பார் சான்றோர். எனவே எமது ஒழுக்க சீலத்தின் பிரதிபலிப்பே பாடசாலையின் முன்னேற்றமாகும். நாம் முயற்சியுடன் கற்று கல்வியில் நல்ல பெறுபேற்றைப் பெற வேண்டும், விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் திகழவேண்டும். எம்மில் மறைந்து கிடக்கும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட வேண்டும். கலைஞானம் கற்க வேண்டும், பரதம் படிக்க வேண்டும், பாடல்கள் பாடவேண்டும். மாணவர்களாகிய நாம் இவ்வாறு பல பணிகளைத் தொடர்ந்து எமது பாடசாலைக்கு பெருமை தேடவேண்டும்.

ஒரு சில ஆசிரியர்களுடனும், சிறுதொகை மாணவர்களுடனும் ஆரம்பித்த எமது பாடசாலை இன்று இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுடனும், எழுபத்தைந்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுடனும் காணப்படுகின்றது. தொடர்ந்து வந்த அதிபர்களின் சேவைகளும் குறிப்பாக காலஞ்சென்ற மகேசனின் அரிய சேவையும் கிடைக்கப் பெற்றதனால் மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. விஞ்ஞானகூடம், நூல் நிலையம், புதிய பல வகுப்பறைகள் ஆகியவற்றை இன்று காண்கின்றோம். இவ்வாறு வசதிகள் பெருக, கல்வி வளர, பணிகள் தொடர எமது முயற்சி மேலும் பல்கிப் பெருகவேண்டும்.

[கீழ்ப் பிரிவு-முதலாமிடம்]

பரிசுக் கவிதை

# வாழிய நீ விவேகானந்தா

ஆயிரம் ஆண்டுகள் அழிந்தாலும்-அழியாது
உனது அழியாப் புகழ் அன்றோ!
சீரிய செழும்புகழ்ஓங்கும் கொழும்பு மாநகரில்
சிறப்பாய் ஓங்கிடும் விவேகானந்தாவே

அன்னையே அரும் பெரும் அரச ஆலமரமே-என்று
உன்னையே வந்தடைந்தோருக்கு,
தன்னையே, தன்னுயிரையே கொடுத்து வந்தாரை வாழவைக்கும்
தென்னையே, தெளிந்த பெரும்கடலே, வாழியநீ
விவேகானந்தாவே!

கண்ணின் கண்மணியே, புதுச்செட்டித் தெருவின் மின்விளக்கே
கல்விக் கடலின் நாயகமே, தமிழ்பேசும் மாணவரின் காதலியே
என்னவென்று சொல்வேன் உன்னை ஏறெடுத்துப் பாராய் என்னை
எனதருமை காதலியே வாழியேநீ விவேகானந்தாவே

''எண்பத்தி மூன்றுத்'' தீ எட்டியும் பார்க்கவில்லை உன்னை
எம்நாட்டின் பிரதமரே தழுவுகிறார் உன்னை என்றும்
எங்கு பார்ப்பினும் புகழோசை, எட்டிக்கேட்கினும் மணியோசை
எவர் வாயிலும் வாழிய விவேகானந்தா எனும் சொல்லோசை

வாழிய வாழிய என வாழ்த்திட நான் கம்பனும் அல்ல
வானுயர் உன்புகழை எடுத்தியம்பிட கண்ணதாசனும் அல்ல
ஓடோடி வந்துன்னை அணைத்திட ஓட்டவீரர் கலீபாவும்
அல்ல-வெறும்
மனதில் உன்னை வைத்து வணங்கிடும் பக்தனே யான்,

**பி. சுரேஷ் வடிவேல்ராஜ்**
க. பொ. த. உயர்தரம்
விஞ்ஞானப் பிரிவு

[மேற்பிரிவு-முதலாமிடம்]

பரிசுக் கவிதை

# வாழிய விவேகானந்தா

வாழிய நீ விவேகானந்தாவே நல்
வளம்பெறு நீ விவேகானந்தாவே

மலர் என்னும் பாடசாலையில்-நல்
வண்ணாத்திப்பூச்சிகள் நாம்
தேன் என்னும் பாடம் படிக்கவந்தோம்
தெள்ளெனக் கற்றிட அருள் தந்தாய்

நீடிய சேவையாலே பல
நிதியங்கள் தந்தாய் எங்களுக்கு
நாடிய கல்வி உன்னிடம்
நயப்புடன் கிடைக்கும் எங்களுக்கு

எல். கே. ஜி. வகுப்பிலிருந்து
ஏ-லெவல் வரை உன்சேவை
என்னென்று சொல்வேன் உன்மகிமை
இதற்கும் உண்டோ ஓர் உவமை,

கல்வியறிவை வளர்க்க கற்றநல்லாசிரியர்
கதைகள் பல படிக்க கலைநூல் வாசகசாலை
ஆய்வுபல புரிய அரும்பெரும் ஆய்வுகூடம்
அன்பு வழிபாடு செய்ய அழகான கோவில்

அறுபது ஆண்டுகாலம் நீயாற்றிய சேவையை-நாம்
அறுநூறு ஆண்டுகாலம் ஆற்றினாலும்
ஒரு காலும் இயலாது
எம் கடமை முடியாது.

**செல்வி என். நிலானி**
(மத்திய பிரிவு கவிதைப் போட்டி
முதலாம் இடம்.)

# வைரவிழா போட்டி முடிவுகள்

## கவிதை

### மேற்பிரிவு:

முதலாம் இடம்;
செல்வன் P. சுரேஷ் வடிவேல் ராஜ்
இரண்டாம் இடம்:
செல்வி S. சுபத்திரா
மூன்றும் இடம்:
செல்வி இ. சாரதாதேவி,

### மத்திய பிரிவு:

முதலாம் இடம்;
செல்வி N. நிலானி
இரண்டாம் இடம்:
செல்வி E. சண்முகவடிவு
மூன்றும் இடம்:
செல்வி E. சாந்தநாயகி

## பேச்சு

### மேற்பிரிவு:

முதலாம் இடம்:
செல்வன் P. சுரேஷ் வடிவேல் ராஜ்
இரண்டாம் இடம்:
செல்வன் K. சிவகுமார் பழனிவேல்
மூன்றும் இடம்:
செல்வி வடிவாம்பிகை

### மத்திய பிரிவு:

முதலாம் இடம்:
செல்வி A. பவானிவள்ளி
இரண்டாம் இடம்:
செல்வி S. சுகன்யா
மூன்றும் இடம்:
செல்வி N. நிலானி

### கீழ்ப்பிரிவு:

முதலாம் இடம்:
செல்வன் பா. கிருஷ்ணகுமார்
இரண்டாம் இடம்:
செல்வி எம், சியாமளவாணி
மூன்றும் இடம்:
செல்வன் சி. சிவமுருகன்

### ஆரம்ப கீழ்ப்பிரிவு:

முதலாம் இடம்:
செல்வன் க. கஜன்
இடண்டாம் இடம்:
செல்வி வி. சர்மிளா
மூன்றும் இடம்:
செல்வன் சுபாஷ் ஆனந்த ராஜா

## கட்டுரை

### மேற்பிரிவு:

முதலாம் இடம்:
செல்வி K. அனுராதா
இரண்டாம் இடம்:
செல்வன் S. சுரேஷ் வடிவெல் ராஜ்
மூன்றும் இடம்:
செல்வி S. வடிவாம்பிகை

### மத்திய பிரிவு:

முதலாம் இடம்:
செல்வி A. பவானி வள்ளி
இரண்டாம் இடம்:
செல்வி N. நிலானி
மூன்றும் இடம்:
செல்வி E. சண்முக வடிவு

### கீழ்ப்பிரிவு:

முதலாம் இடம்:
செல்வி T. சியாமளவாணி
இரண்டாம் இடம்:
செல்வன் S. சரவணகுமார்
மூன்றும் இடம்:
செல்வன் K. சதீஷ் குமார்

### போட்டிக் குழு:

(1) ப. ஆப்டீன்
(2) திருமதி பாஸ்கரசுந்தரம்
(3) திருமதி S. பாலசுந்தரம்
(4) செல்வி S, பரமலிங்கம்
(5) திரு. S, பாலச்சந்திரன்
(6) திரு. C. வல்லிபுரம்
(7) திரு. S. உதயச்சத்திரன்

# இந்துமதமும் கல்வியொழுக்கமும்

**செல்வி சி. சுமங்களா**
*(க. பொ. த. உயர்தரம்-வர்த்தகப் பிரிவு)*

உலகில் காணப்படும் பல்வேறு மதங்களில் இந்து மதம் மிகத் தொன்மை வாய்ந்தது என்பது பல வரலாற்றுச் சான்றுகளாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு மதம் மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையினையும் அதற்கான வழிவகைகளையும் கூறியுள்ளது. இந்து மதத்தின் முதல் நூல்களான வேதம், ஆகமம் என்பன குரு சிஷ்ய பரம்பரை வழியாக, கல்வியாகப் பேணப்பட்டு வந்துள்ளன. வேறு எந்த மதங்களிலும் காணப்படாத ஒரு தன்மை காணப்படுகிறது. அதாவது இந்த வேதங்களும் ஆகமங்களும் எழுத்து வடிவில் இல்லாமல் காலம் காலமாகக் குரு சிஷ்ய முறையில் மனனம் செய்யப்பட்டுப் பேணப்பட்டு வந்துள்ளன, இதன் மூலமே இந்து மதக் கல்விப் பாரம்பரியமும் பேணப்பட்டது. இப் பாரம்பரியக் கல்வி பிரமத்தை அடைய உதவும் கல்வியாகவே அன்று விளங்கியது,

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே மனிதன் பெறும் கல்வி மனிதனைப் பூரணப்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்குடன் கல்வியைப் புகட்டியது எமது இந்துமதமாகும். கல்வியின் நோக்கம் கடவுளை அடைதல் அதாவது பூரணஞானம் பெறுதல் அல்லது பிரமத்தை அறிதல் எனும் குறிக்கோளுடன் கல்வி கற்பிக்கப்பட்டது. இதனையே திருவள்ளுவ நாயனாரும் கூட,

''கற்றதனாலாய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்''

எனக் கூறியுள்ளார். பூரணத்துவம் பெற முயலும் மனிதனை இந்து மதமானது படிமுறையில் இட்டுச் சென்று இறுதியில் இறைவனை அடையும் வழியைக் காட்டுகிறது. இந்து மதம் நான்கு ஆச்சிரமங்களையும் பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என வாழ்க்கை நிலையாக வகுத்து உயர் இலட்சியமாம் முக்தியையடைய அல்லது பிரமத்தை உணரும் பூரணத்துவத்தை அடைய வழிவகுத்துத் தந்துள்ளது. இதில் முதல் ஆச்சிரமமான பிரம்மச்சரியமே கல்வி கற்பதற்கு ஏற்ற காலப் பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையே ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்று ஒளவைப் பாட்டியும் கூறிப் போற்றியுள்ளார். இதற்கிணங்க இளம் பிராயத்தில் கற்பனகற்று கற்றதின்படி நிற்கப் பழகிக் கொள்ளப் பயிற்சியளிக்கும் பராயமாக பிரம்மச்சரியம் விளங்கியது.

அத்துடன் அன்றைய கல்வி முறை இயற்கையோடியைந்ததாயும் அமைந்திருந்தது. உலக ஆரவாரங்களற்ற இயற்கைச் சூழலில், காடுகளில் கற்ற கல்வியின்படி ஒழுகும் தவசீலர்களாகிய குருவினிடம் சீடர்கள் பாடங்களைப் பயின்றனர். வேதங்களின் சாரம் என்றும் வேதாந்தம் என்றும் அழைக்கப்படும் உபநிடதங்கள் குரு, சிஷ்ய சம்வாத அடிப்படையில் உருவானவையே. ஒரு கருத்தை குரு சொல்ல சிஷ்யன் அவனுடைய மனதில் உதித்த சந்தேகங்களை எவ்வித தயக்கமும் இன்றி கேட்கின்றான். நான் சொல்கிறேன் ஆகவே நீ நம்பவேண்டும் என்ற உபதேசம் உபநிடதத்தின் எந்தப் பகுதியிலும் இல்லை. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ப் பொருள் காண்பதறிவு என்ற அடிப்படையிலே உபநிடதங்கள் அமைந்துள்ளன,

மேலும் உபநிடதங்களில் பாடம் தொடங்குமுன் குருவும் சீடர்களும் கற்றலின் இணக்கத்தோடு கூடிய ஒத்துழைப்பை வேண்டி இறைவனை பிரார்த்திக்கும் முறையினையும் நாம் காணலாம். கடோபநிடத்தில் வரும் பிரார்த்தனை பின்வருமாறு: ''இறைவன் எம்மைக் காப்பாற்றுவானாக, எம்மிடத்திற் பிரியம் வைப்பானாக, நாம் உற்சாகத்துடன் கற்றலில் ஈடுபடுவோமாக, கற்பதின்மூலம் எம்மிடம் ஞானம் உதயமாகட்டும், நாம் ஒருவரையொருவர் வெறுக்காதிருப்போமாக'' என வேண்டுவதிலிருந்து குருவும் சீடனும் மனமொத்து இறைவனிடம் பிரார்த்தனை செய்து கற்ற இன்பமுடன் திகழ வேண்டுவதைக் காணலாம், 'கற்றல்' இனிது நிறைவேற குருவுக்கும், சீடனுக்குமிடையில் ஒற்றுமையும் ஒரே நோக்கமும் இருக்க வேண்டியதின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது. இத்தகைய நெருங்கிய இணைப்பின் காரணமாகக் குரு தான் அடைந்த பூரணத்துவ நிலையை சீடனும் அடைய மனமார வாழ்த்தும் மாண்பினைக் காணலாம்.

குருவிடம் கல்வி பயிலச் செல்லும் சீடன் குருவிடம் கல்வி கற்பது மட்டுமன்றி குருவின் மேலான தவ வாழ்க்கையையும் பூரணத்துவத்தையும் அறியும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்கின்றான், குருவானவர் அறிவுக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கும் வழிகாட்டியாக எடுத்துக் காட்டாக வாழ்வதை சீடர்கள் காணக் கூடியதாக இருந்துள்ளது. இத்தகைய குரு ஒருவருக்குப் பணிவிடை செய்து அவருக்கு அடங்கிப் பாடம் கேட்பதே அன்றைய கல்வியொழுக்கமாக இருந்தது. குருவுக்கு மட்டும் அன்றி குருபத்தினிக்கும் சேவை புரிந்து தனது குடும்பம் போல குருவின் குடும்பத்தையும் எண்ணிச் சேவை செய்து கற்பதே உயர்ந்த மாணவனுடைய ஒழுக்க நெறியாகத் திகழ்ந்தது,

மாணவர்களின் கல்வி கற்கும் தன்மையை விட அவன் ஒழுக்கமுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளமையை நாம் பல இடங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது. பாரதத்தில் கௌரவர்களும், பாண்டவர்களும் ஒரே குருவிடம் கல்வி கற்கின்றபோதும் ஒழுக்கத்தில் சிறந்த பாண்டவர்களே குருவின் சிறந்த மாணவர்களாக கணிக்கப்படுகின்றமையை நாம் அவதானிக்க முடிகின்றது, இதையே வள்ளுவரும் ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்றார்,

மேலும் இத்தகைய மாணவர்கள் குரு பக்தி மூலமே ஞானத்தை அறியக் கூடியவராகவும் இருந்தனர். எடுத்துக் காட்டாக ஏகலைவன் வில்வித்தை கற்க விரும்பினான். ஆனால் துரோணாச்சாரியார் மறுத்துவிட்டார். இதனால் ஏகலைவன் மனம் உடைந்து போகவில்லை. குருவின் மேல் கொண்ட பக்தியினால் அக்கலையைப் பெற்றான்.

உபநிடதங்களில் குருவும் சீடர்களும் சத்தியத்துக்கு உயர் இடம் அளிப்பவர்களாக விளங்கினர். உண்மை பேசுதல் உயரிய ஒழுக்க நெறியாகக் கொள்ளப்பட்டது. இதனை விளக்குவது சத்திய காமன் கதை. தந்தை பெயரறியாத சத்திய காமன் கௌதமன் எனும் குருவிடம் கல்விபயில விரும்பினான் குருவினிடம் சென்று, ஐயனே என்னை உங்கள் மாணவனாக ஏற்றுக் கொள்வீர்களா' எனக் கேட்டான். அதற்குக் குருவானவர் உன் குடிப்பிறப்பு யாது எனக் கேட்டார். சத்திய காமனோ தனது குடிப்பிறப்புத் தெரியாதென்றும் தன் அன்னை வேலைக்காரியாக ஊரூராகத் திரிந்த போது தன்னைப் பெற்றெடுத்ததாகவும் சொன்னான். இதனைக் கேட்ட ஆசிரியர் நீ உண்மை பேசி உண்மையினின்று ம்திறம்பாதபடியால் உன்னை மாணவனாக ஏற்றுக் கொள்கிறேன் எனப்பதிலளித்தார் இக்கதையில் இருந்து உண்மை பேசுதல் உயர் ஒழுக்கமாக கொள்ளப்பட்டதென்பதை உணர்ந்து கொள்ளலாம்,

இதிகாச காலங்களில் குருவானவர் செல்வராயினும், வறியவராயினும், அரசராயினும், அந்தணராயினும் வேற்றுமை பாராட்டாது சீடர் எனும் நிலையில் எல்லோரையும் சமமென மதித்துக் கல்வி புகட்டியதைக் காணலாம். கல்வியைப் பெறுதல் எல்லோருக்கும் உரிய தொன்றாகவே இந்து மதம் கருதி வருகிறது. கல்வி கற்றபின் குருவுக்கு தட்சிணை வழங்குவதே வழக்கமாக இருந்தது. தமது சக்திக்கேற்பவே தன்னாசிரியனுக்குத் தட்சினை அல்லது காணிக்கை வழங்கினர், சில வேளைகளில் ஆசிரியர் விரும்புவதையே மாணவர் தட்சிணைக்யாக

கொடுப்பதும் உண்டு. எடுத்துக் காட்டாக துரோணர் அர்ச்சுனனிடம் குரு தட்சினை யாக ''யாகசேனனைச் சிறைப்படுத்தி என் பால் கொண்டுவந்து தருவீரே அதுவே எனக்கு திருப்பதி என்றார். அர்ச்சுணனும் யாகசேனனைச் சிறைப்படுத்தி அக்குரு பணியை நிறைவேற்றினான்.

இந்து மதத்தில் குருவானவர் மிக உயர்ந்த இடத்தை வகிக்கிறார், குருபிரம்மா, குருவிஷ்ணு, குரு சாட்சாத் பரப்பிரம்மா வென குருவை வணங்குவோமென இந்து மதம் கூறுகிறது. தெய்வமே குரு வடிவாக வந்து மக்களை ஆட்கொள்ளும் திறனைத் திருவருட்பயன் பின்வருமாறு கூறுகிறது:

பார்வையென மக்களைப் பற்றிப்
பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி.

மாணிக்கவாசகப் பெருமானைக் குருந்தமர நிழலில் ஆட்கொண்டருளிய இறைவன் குரு வடிவாகவே மானிட உருவந் தாங்கி வந்தது நாமறிந்ததே.

குருவைப் போற்றி வணங்குதல் மூலம் பூரண ஞானத்தை மனிதன் பெற முடியுமென இந்துமதத் தத்துவம் கூறுகிறது. 19ம் நூற்றாண்டில் வாழ்ந்து இந்து மதத்தினை உலகளாவிய முறையில் புகழ்பெறச் செய்த சுவாமி விவேகானந்தர் பூரணத்துவ நிலைபெறக் காரணமாயிருந்தவர் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சரேயாவர். குருவின் போதனைகளும் ஆன்மீக நெறிப்படுத்தலுமே அவருக்கு மாபெரும் வீரத்தையும் உறுதியையும் புகழையும் அளித்தது. ''விழுமின் எழுமின் லட்சியத்தை அடையும் வரை ஓயாதீர்கள்'' என சுவாமி விவேகானந்தர் விடுத்த அறைகூவல் சகல இந்துவின் காதிலும் எதிரொலிக்க வேண்டியது அவசியம். சோம்பேறித்தனம் கவனமின்மை என்பன ஒரு விடயத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதனை உணர்ந்த விவேகானந்தர் இந்த அறைகூவலை விடுத்தார். இந்த வகையில் இந்து மதத்தின் கல்வியொழுக்க முறைகள் ஆரம்ப காலம் தொட்டே கூறப்பட்டு வந்துள்ளமையை நாம் அவதானிக்க முடிகிறது.

இதிலிருந்து இந்துமதம் குருவுக்கு அளித்திருக்கும் உன்னதமான நிலையை உணரக்கூடியதாக இருக்கிறது. இருட்டில் வழிதெரியாது திகைப்பவன் சிறிய விளக்கின் ஒளி துணையாக இருப்பின் இலகுவில் வழி அறிந்து நடக்க உதவுவதுபோல் ஞான குருவும் உலக வாழ்க்கையில் உழலுபவருக்கு ஒளி வழிகாட்டி ஆன்மீக வழியில் எளிதில் செல்ல உதவி நல்கிறார். எனவே குருவின்றி இந்துமதத்தில் ஒருவன் கற்ற கல்வியின் பூரணத்துவத்தை அடைய முடியாது, எனவே குருவைப் போற்றி அவர் மூலம் ஞானத்தைப் பெற்று பூரணத்துவம் பெற முயலுதல் மாணவர் கடமையாகும்,

---

''புதிய சகாப்தத்தின் தூய ஒளியை நோக்கி மனிதர்களின் கண்கள் திரும்ப முனைகின்றன. இந்தத் தூய ஒளி மேதைகளின் கண்களுக்கே ஆரம்பத்தில் தட்டுப்படலாம். தனக்குப் புலப்படும் அந்த ஒளியை அவன் தனது கலா சிருஷ்கள் மீது திருப்பி, அதனைப் பிரதிபலிப்பதன் மூலம், அந்த ஒளியைச் சாதாரண மனிதர்களின் கண்களுக்கும் புலப்படச் செய்ய வேண்டும்.

- அறிஞர் பெர்னட் ஷா

---

# ஏற்றுமதி இறக்குமதி அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

**செல்வன் து. திலீபன்**
*வகுப்பு 12 B (வருடம் 13)*
*வர்த்தகப் பிரிவு*

இன்று உலக நாடுகள் ஒவ்வொன்றினதும் பொருளாதார விருத்தியில் சர்வதேச வர்த்தகம் செல்வாக்கு செலுத்தும் ஒரு காரணியாக அமைந்துள்ளது. சர்வதேச வர்த்தக தளம்பல்கள் ஒரு நாட்டினுடைய உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம் மற்றும் சென்மதி நிலுவை சம்பந்தமாக ஒரு நாட்டின் சொத்துக்கள், பொறுப்புகள் என்பவற்றிலும் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்த வகையிக் இலங்கையிலும் சர்வதேச வர்த்தகமானது செல்வாக்கு செலுத்தி வருகின்றது. பொதுவாக சர்வதேச வர்த்தகமானது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு சாதகமானதாக தோன்ற வில்லை, காரணம் அந்நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி அமைப்புக்கள் அந்த வகையில் அமைந்துள்ளன, அண்மைக் காலத்தில் குறிப்பாக 1977ம் ஆண்டிற்குப் பின்னர் அதன் அமைப்புக்களில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்கள் எவை என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை நீண்டகாலமாக மரபு ரீதியான ஏற்றுமதிப் பொருட்கள், மரபு ரீதியற்ற ஏற்றுமதிப் பொருட்கள் எனப் பாகுபடுத்தி வந்தனர். ஆனல் அண்மைக் காலங்களில் இலங்கையின் ஏற்றுமதி வருமானங்களில் ஏற்பட்ட மாற்றங்களும், அரசாங்கத்தின் வர்த்தக கொள்கைகளும் இணைந்து புதியதோர் பாகுபாட்டினை மத்திய வங்கியானது தோற்றுவிப்பதற்கு ஏதுவாக இருந்தது எனலாம்,

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை;

1. வேளாண்மை ஏற்றுமதிகள்,
2. கைத்தொழில் ஏற்றுமதிகள்,
3. கனிப் பொருட்கள் ஏற்றுமதிகள்,
4. இதர ஏற்றுமதிகள்,

எனப் பாகுபடுத்துவதே பெருமளவுக்கு பொருத்தமானதாகும், நீண்டகாலமாக மொத்த ஏற்றுமதியில் முக்கியத்துவம் பெற்றிருந்த மரபுரீதியான ஏற்றுமதிப் பொருட்கள் எனக் குறிப்பிடப்படும் தேயிலை, இரப்பர், தெங்கு என்பவைகளின் சதவீத ரீதியான பங்கு வீழ்ச்சி அடைந்து வருவதனுலும் இதுவரை முக்கியத்துவம் பெருத கைத்தொழில் பொருட்களின் பங்கு மொத்த ஏற்றுமதியில் ஏறக்குறைய 39 வீதம் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளதனுலும் தான் ஏற்றுமதி அமைப்பினை மேற்குறிப்பிட்டவாறு இலங்கை மத்திய வங்கி பாகுபடுத்தியுள்ளது.

வேளாண்மை ஏற்றிமதிகளைப் பொறுத்த வரையில்,

1. பெருந்தோட்ட விவசாய ஏற்றுமதிகள்,
2. சிறுவேளாண்மை ஏற்றுமதிகள்,

என இருவகைப்படுத்தலாம். பெருந்தோட்ட வேளாண்மை ஏற்றுமதிகள் என்ற வரையறைக்குள் தேயிலை, இறப்பர், தெங்கு ஏன்பன அடங்குகின்றன.

நீண்ட காலமாக இவை ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதனுல் தான் இவற்றினை மரபு ரீதியான ஏற்றுமதிப் பொருட்கள் எனவும் கூறலாம். 1970ம் ஆண்டு வரை மொத்த ஏற்றுமதி வருமானத்தில் பெருந் தோட்ட வேளாண்மை ஏற்றுமதிகள் 90சத வீதத்திலிருந்து மேலாக அமைந்திருந்தது. ஆனல் சமீப காலங்களில் 1977ல் 63சதவீத மாகவும், 1980ல் 52சத வீதமாகவும் 1958ல் 49சத வீதமாகவும் படிப்படியாக வீழ்ச்சி அடைந்து வருகின்றது. அண்மைக் காலங் களில் இலங்கையின் ஏற்றுமதி அமைப்பில் ஏற்பட்டுள்ள முக்கியமான மாற்றம் என்று இதனைக் குறிப்பிடலாம், ஆனல் இங்கு பெருந்தோட்ட வேளாண்மை ஏற்றுமதி களின் மொத்த வருமானம் வீழ்ச்சி அடைய வில்லை. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் இதன் பங்களிப்பு குறைவடைந்து வருகின் றதே உண்மையான நிலையாகும், அதாவது ஏனைய வருமானங்கள் அதிகரித்த அளவிற்கு பெருந்தோட்ட வேளாண்மை ஏற்றுமதி களின் வருமானம் அதிகரிக்கவில்லை எனக் கூறுவதே பொருத்தமானதாகும்.

சிறு வேளாண்மை ஏற்றுமதிகள் என்ப வற்றைப் பொறுத்த வரையில் கோப்பி, மிளகு, கறுவா, கராம்பு, கொக்கோ, வெற் றிலை என்பவற்றைக் குறிப்பிடலாம். 1985ம் ஆண்டில் இவற்றில் இருந்து கிடைத்த ஏற் றுமதி வருமானம் மொத்த ஏற்றுமதியில் 58 சதவீதமாகக் காணப்படுகின்றது,

சமீப காலங்களில் இலங்கையின் ஏற்று மதி அமைப்பில் ஏற்பட்டுள்ள மிக முக்கிய மாற்றம் என்ற வகையில் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதியில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் குறிப்பிடலாம். 1970ம் ஆண்டுகளுக்கு சற்று முன்னர் மொத்த ஏற்றுமதியில் சதவீத ரீதியாக குறிப்பிட முடியாத அளவுக்கு முக்கியத்துவம் குறைந் திருந்த கைத் தொழிற் பொருட்கள் 1980ல் 33 சதவீதமாகவும் 1985 ல் 39 சத வீதம் மொத்தமாகவும் ஏற்றுமதி வரு மானத்தில் சம்பாதிக்கக் கூடிய அளவுக்கு முன்னேற்றம் அடைந்தமை குறிப்பிடத்தக் கதாகும். ஆனலும் இந்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் இருந்து கிடைக்கும் வரு மானம் தேசிய ரீதியில் உண்மையில் இலங் கைக்கு பொருத்தமான என்பது தான் கேள்விக்குறி. ஏனெனில் இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதி என்ற வரை யறைக்குள்,

1. தைக்கப்பட்ட ஆடைகள்,
2. பெற்றோலிய ஏற்றுமதிகள்,
3. ஏனைய ஏற்றுமதிகள்,

என்பன அடங்குகின்றன.

எனவே வெளிநாட்டில் இருந்து தருவிக் கப்பட்ட மூலப்பொருட்கள், இடைத்தரப் பொருட்கள் என்பவற்றின் பெறுமதிகளு டன் பெருமளவுக்கு கூட்டப்பட்ட பெறுமதி யாகவே காணப்படும்.

கனிப் பொருட்களின் ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் இந்த வரையறைக்குள் பிரதானமாகக் காணப்படுவது இரத்தினக் கற்களே ஆகும். 1980ல் இதன் பங்கு 38சத வீதமாகக் காணப்பட்டு பின் 1985ல் 24சத வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது,

எவ்வாருக இருப்பினும் ஒரு நாட்டின் மொத்த ஏற்றுமதியில் கைத்தொழில் பொருட்களின் பங்கு அதிகமாக இருப்பது விரும்பத்தக்கது. இந்த வகையில் இலங்கை யின் அண்மைக்கால ஏற்றுமதிப் போக்கு கள் முன்னேற்றமடைந்துள்ளது. எனக் கூறிக்கொள்ளலாம்.

இந்த வகையில் ஏற்றுமதி அமைப்பை தொகுத்து நோக்கும்போது மரபு ரீதியான பொருட்களான தேயிலை, இறப்பர், தெங் குப் பொருட்களின் ஏற்றுமதி வருவாய் படிப்படியாகக் குறைந்து வருவதையும் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியும் கனிப் பொருட்களின் ஏற்று மதி அளவும் அதிகரித்து வருவதைக் காண லாம். இது எவ்வாருக இருப்பினும் இன்ன மும் மரபுரீதியான பொருட்களான

தேயிலை, இறப்பர், தெங்கு பொருட்களின் ஏற்றுமது வருவாய் மொத்த ஏற்றுமதியில் ஏறக்குறைய 50 சத வீதத்தை கைப்பற்றிக் கொண்டே வருகின்றது. நன்கு வேரூன்றிய இம்மரபு ரீதியான பொருட்களின் ஏற்றுமதி வருவாயை திடீரென குறைப்பது எந்த வகையிலும் சாத்தியப் படமாட்டாது.

இலங்கையின் ஏற்றுமதி அமைப்பினை நாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம்;

1, நுகர் பொருட்கள்

2. இடைநிலைப் பொருட்கள்

3. முதலீட்டுப் பொருட்கள்

4. பகுக்கப்படாதவை.

நுகர்வுப் பொருட்கள் என்ற வரையறைக்குள் உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி என்பவையும், புடவைகளும் அடங்கு கின்றன. இடைநிலைப் பொருட்கள் என்ற வரையறைக்குள் பெற்றோலியப் பொருட்கள், வளமாக்கிகள், இரசாயனப் பொருட்கள், கோதுமை என்பவையும்; முதலீட்டுப் பொருட்கள் என்ற வரையறைக்குள் பொறி, கருவி, போக்குவரத்து கருவிகள், கட்டடப் பொருட்கள் என்பனவும் அடங்கு கின்றன.

நுகர் பொருட்களின் சதவீத ரீதியான பங்கு குறைவடைந்து வருகின்றது, இது ஒரு விரும்பத்தக்க மாற்றம் ஆகும், அரிசியினைப் பொறுத்த வரையில் சதவீத ரீதியான பங்கு குறைவடைந்துள்ளது. எனினும் இலங்கையின் நெல் உற்பத்தியில் தன்னிறைவு எய்தக் கூடிய கட்டம் நெருங்கி வந்த வேளையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது, நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட முக்கிய மாற்றமாக மாவைக் குறிப்பிடலாம், 1980ல் 5.4 சதவீதமாகக் காணப்பட்ட மாவின் பங்கு 1985ல் 0.4சதவீதமாகக் காணப்படுகின்றது. இந்த பெருமளவு வீழ்ச்சிக்குக் காரணம் 1980ல் திருகோணமலையில் பிறிமா தொழிற்சாலை நிறுவப்பட்ட பின்னர் மா என்ற முடிவுப் பொருளுக்குப் பதிலாக கோதுமை, தானியம் என்பன இடைத்தரப் பொருட்களாக இறக்குமதி செய்யப்படுவதாலாகும், சீனியின் இறக்குமதி பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கும் உள்நாட்டில் சீனிக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு, தனியாரினதும் வெளிநாட்டு கம்பனிகளினதும் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்தமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

இடைநிலைப் பொருட்களின் பங்கு ஏறத்தாழ மொத்த இறக்குமதியில் அரைப் பங்குக்கு சமமாக உள்ளதை அவதானிக்கலாம். இடைநிலைப் பொருட்கள் என்பவை மேலும் உற்பத்தியின் அதிகரிப்புக்கு உதவக் கூடிய மூலப் பொருட்களாகும். வளர்முக நாடொன்றில் இத்தகைய மூலப் பொருட்களின் இறக்குமதி தொடர்ச்சியாக அதிகரித்தும் பெரும் பங்கினைக் கொண்டிருப்பதும் விரும்பத்தக்க தொன்றாகும். ஏனெனில் முடிவுப் பொருட்களாக இறக்குமதி செய்வதனை விட மூலப் பொருட்களாக இறக்குமதி செய்வதனுல் உள்நாட்டில் வேலைஇல்லாப் பிரச்னை நீங்குவதுடன் நாட்டின் வேறு பல மூலவளங்களின் பயன்பாட்டினைக் கூட்டிக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். இதில் பெருமளவு பங்கு பெற்றோலியப் பொருட்கள் வகிக்கின்றன. இவ்வாறு பெற்றோலியப் பொருட்களுக்கு அதிகளவு பணம் செலவிடுவதற்கான காரணம்,

(i) சர்வதேச ரீதியில் எரி பொருட்களில் விலை தொடர்ச்சியாக அதிகரித்தமை,

(ii) சுதந்திர வர்த்தக வலயம், மகாவலி, தாராள வர்த்தக அபிவிருத்தியினுல் கப்பல்களின் வருகை போன்றவற்றின் காரணமாகவும் அத்துடன் அரசின் புதிய முயற்சிகளை ஆரம்பித்ததனுலும் இவற்றிற்குத் தேவையான எரிபொருட்களின் இறக்குமதித் தொகையினைக் குறைத்துக் கொள்ள முடியாமை.

முதலீட்டுப் பொருட்களின் மொத்த ரீதியான பங்கு அதிகரித்து வந்தபோதிலும் 1985ல் சற்று வீழ்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆனாலும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் பொறியும், கருவியும் 1980ல் 4212 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது, போக்கு வரத்து கருவிகளின் இறக்குமதிக்கான செலவினம் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றதை அவதானிக்கலாம். 1980ல் 2421 மில்லியன் ரூபாவாக காணப்பட்டு பின் 1985ல் 2499 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

இறக்குமதித் துறையினைப் பொறுத்த மட்டில் 1977ம் ஆண்டு வரையும் அரசாங்கமே பெருமளவு பொருட்களை இறக்குமதி செய்து வந்துள்ளது. இதனையே இறக்குமதித் துறையினைக் குறித்து அரசாங்கம் தனியுரிமை வகித்தது எனலாம், ஆனால் 1977ம் ஆண்டின் பின்னர் அரசாங்கம் தாராள வர்த்தகக் கொள்கையை விரும்பியதனால் தனியார் துறைக்கும் பொருட்களை இறக்குமதி செய்யக் கூடிய வாய்ப்பினை வழங்கியுள்ளது. இதன் காரணமாக இதுவரை காலமும் அரசாங்கம் வகித்து வந்த தனியுரிமை நிலை தற்போது சிதைவடைந்து இறக்குமதி துறையினைக் குறித்து அரசாங்கத் துறையுடன் தனியார் துறையினர் போட்டியிடும் நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை தொகுத்து நோக்குமிடத்து எமது ஏற்றுமதிகளின் தன்மையின் காரணமாக அதிக அளவு வருமானத்தைப் பெற முடியாத விடத்து இறக்குமதிப் பொருட்களின் தன்மையின் காரணமாகக் குடித்தொகை அதிகரிப்பு, பொருளாதார அபிவிருத்தி என்பவற்றின் காரணமாக வருடாந்தம் இறக்குமதிச் செலவு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. 1977ம் ஆண்டில் இலங்கையின் நேர்க்கணிய வர்த்தக நிலுவை 509 மில்லியன் ரூபாவாக இருந்தது. ஆனால் 1978 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையில் நேர்க்கணிய வர்த்தக நிலுவையை இலங்கை கற்பனையில் தான் காணக் கூடியதாக உள்ளது.

---

இலக்கியம் மனித உள்ளத்தில் சத்திய தாகத்தையும் வேகத்தையும் எழுப்புவதாக இருக்க வேண்டும். அநியாயத்தையும் அக்கிரமத்தையும் எதிர்த்துப் போராடக்கூடிய உணர்வையும் தெம்பையும், வாழ்க்கையின் சிரமங்களை எல்லாம் முறியடித்து முன்னேற்றுவதற்கான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுவதாக இருக்க வேண்டும். இவ்வாறெல்லாம் சமுதாயத்திற்குப் பயன்படுவதே இலக்கியமாகும், இவ்வாறு பயன்படாத எழுத்துக்கள் இலக்கியம் என்று சொல்வதற்கே கூட தகுதி படைத்தவையல்ல.

-பிரேம்சந்த்

---

# வளர்ந்து வரும் விஞ்ஞானமும் அதன் பக்கவிளைவுகள்

**செல்வன் M. யோகநாதன்**
*ஆண்டு '13' விஞ்ஞான பிரிவு*

ஆதிகாலத்தில் மிருகங்களை வேட்டையாடியும் அதற்காக இடத்துக்கிடம் திரிந்தும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மனிதன் ஆற்றங்கரைகளிலும் மலைப் பிரதேசங்களிலும் நிலையான குடியிருப்புகளை அமைத்து விவசாயம் செய்யத் தொடங்கினன். இதனுல் மனிதனுக்கு சிந்திக்க போதிய அளவு நேரம் கிடைத்தது. என்று மனிதன் சிந்திக்கத் தொடங்கினனே அன்றே அவன் விஞ்ஞானம் எனும் விவேகத்தை கண்டு பிடித்தான். என்று மனிதன் விஞ்ஞானத்தைக் கண்டுபிடித்தானே அன்றே அவன் மிருகங்களிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டான். மனிதனுல் பிரசவிக்கப்பட்ட விஞ்ஞானம் தவழ்ந்து நடந்து வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய நவீன, விஞ்ஞானமாகியது. இன்று மனிதனுடன் ஒன்றறக் கலந்து விஞ்ஞானமின்றேல் மனிதன் இல்லை என்ற அளவுக்கு அவனது அன்றாட செயல்களையும் கட்டுப்படுத்திவிட்டது.

இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனிதன் தற்செயலாக கற்கள் இரண்டு உரசியபோது நெருப்பு தோன்றியதை அவதானித்தான். அன்றிலிருந்து மனிதன் சிந்திக்கத் தொடங்கினன். அன்றே மனிதனின் மூளை எனும் கர்ப்பச் சிறைக்குள்ளிருந்த குழந்தையான விஞ்ஞானம் பிரசவிக்கப்பட்டது. அன்றைய மகத்தான விஞ்ஞான பிரசவத்தின்போது மனிதன் பிரசவவேதனையை அனுபவிக்காததாலோ என்னவோ இன்று அதனிலும் பெரிய வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றுன். அரிய விஞ்ஞான பிரசவத்தின்பின் படிப்படியாக தன் சூழலைப்பற்றியும் தன் சூழலில் உள்ளவற்றை எவ்வாறு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பது பற்றியும் மனிதன் அறிந்து கொண்டான். ஆனுல் அன்றைய விஞ்ஞானம் தனது கண்டுபிடிப்புகள் அனைத்தையும் இயற்கைக்கு உட்பட்டதாகவே அமைத்துக் கொண்டது. அத்துடன் அன்றைய மனிதன் விஞ்ஞானத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தான், அன்றைய விஞ்ஞானிகள் பெரும்பாலும் மதகுருக்களாகவே இருந்தனர். அவர்கள் அஹிம்சை நோக்குடன் மட்டுமே விஞ்ஞானத்தைப் பயன்படுத்தினர், இதனுல் அன்றைய மனிதன் விஞ்ஞானத்தால் தனக்குப் பாதகமான எந்தவொரு பக்க விளைவையும் எதிர்நோக்கவில்லை.

